விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள் : இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 04 புதன்கிழமை (19.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 366

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து





நாடு முழுவதும் காலநிலை சீற்றம்

## மழை வெள்ளத்திற்கு 15 பேர் வரை பலி!

(கொழும்பு)

மழை வெள்ளம் மற்றும் மண் சரிவுகள் காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் பெண்கள், குழந்தைகள் உட்பட குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளார்கள். சுமார் 12 பேர் வரை காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் பிற அதிகாரிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (19ஆம் பக்கம் பார்க்க)

## பந்தயக் கார் இறக்குமதியால் நாட்டுக்கு பெரு நஷ்டம்

### மகிந்த புதல்வர்கள் மீது ஜே.வி.பி. பாய்ச்சல்

(கொழும்பு)

மகிந்த புதல்வர்களுக்கு பந்தயக்கார் வாங்குவதற்கு 993 லட்சம் ரூபாய் கிடைத்தது எவ்வாறு என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அநுரகுமார திஸநாயக்க,

பந்தயக்காரர்களை வரி இன்றி இறக்குமதி செய்ததன் மூலம் நாட்டிற்கு ரூபா 2000 லட்சம் நட்டம் ஏற்பட்டுள்ளது.

2013-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ள விடயங்கள் ஏற்கெனவே ராஜபக்ஷ புதல்வர்களுக்கு தெரிவிக்கப்பட்டு விட்டது. இதன் (20ஆம் பக்கம் பார்க்க)

## ரி.ஐ.டியினரின் கைதுகள் நாளுக்கு நாள் அதிகரிப்பு

### இன்னும் தொடருமா? - மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று வரை யாழ்.மாவட்டத்திலிருந்து 36 பேரும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 3 பேருமாக மொத்தம் 39 பேர் கடந்த சில வாரங்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி) யாழ்.மாவட்டத்திலிருந்து மட்டும் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என முன்னர் தகவல்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## கண்தானம் செய்யும் 'மில்லியன்' பெண்மணி

(கொழும்பு)

நேற்று தேசிய கண்தான தினமாகும். இதனைமுன்னிட்டு கொழும்பு ஸ்ரீ சம்புத்தத்வ ஜெயந்தி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில்கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியாரும் இலங்கையின் முதல் பெண்மணியுமான சிராந்தி ராஜபக்ஷ தனது கண்களை தானம் செய்யும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இந் நிலையில் இலங்கையில் கண்தானம் செய்யும் ஒரு மில்லியனாவது நபர் சிராந்தி ராஜபக்ஷ ஆவார். (20ஆம் பக்கம் பார்க்க)

## கொடூரமான இரசாயன ஆயுதங்களை இலங்கை அரசு பயன்படுத்தியுள்ளது!

### சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் தெரிவிப்பு

(சென்னை)

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில், இதுவரை எந்த நாட்டிலும் பயன்படுத்தப்படாத கொடூரமான இரசாயன ஆயுதங்களை இலங்கை இராணுவம் பயன்படுத்தியுள்ளது. ஆனால் இலங்கை அரசு இறுதிப் போர் குறித்த எந்தப் புள்ளி விபரங்களையும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

இதனால் குறைந்தபட்ச உண்மைகளைக் கூட ஏற்க மறுப்பதால் இலங்கையின் வாக்குறுதியை சர்வதேச சமூகம் நம்பமறுக்கிறது என்று பி.பி.சியின் முன்னாள் செய்தியாளர் பிரான்செஸ் ஹாரிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த நான்காம் கட்ட போர் குறித்து அவர் எழுதிய ஆங்கில நூலின் தமிழ் மொழியாக்கம், ஈழம் சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் என்ற தலைப்பில் சென்னையில் வெளியிடப்பட்டது.

அங்கு உரையாற்றிய நூலாசிரியர் பிரான்செஸ் ஹாரிசன் இலங்கையில் போர் முடிந்து கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளாகின்றன. ஆனால் போரில் இறந்தவர்கள் எத்தனை பேர் (20ஆம் பக்கம் பார்க்க)

## டீசல் விலை அதிகரித்தால் சேவையிலிருந்து விலகுவோம்

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு காரணத்திலேனும் டீசலின் விலை அதிகரிக்கப்படுமாயின், உத்தேச பேருந்து கட்டண மீளாய்வை பெற்றுக் கொள்ளாது சேவையிலிருந்து விலகப்போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில கலந்து கொண்டு உரையாற்றிய அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு பெற்றோல் 10 ரூபாயால் விலை அதிகரிக்கப்பட்டது. இதனால் டீசலின் விலை அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

அந்தநிலைமைகளுக்கு அமைய விலை அதிகரிக்கப்பட்டால் தொடர்ந்தும் பேருந்துச் சேவையின் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனிதவுரிமை மீறல்கள் இலங்கையில் அதிகரிப்பு

### கனடா கவலை வெளியீடு

(ரொன்ரோ)

இலங்கையின் தற்போதைய மோசமான மனிதவுரிமை மீறல் நிலைமைகள் தொடர்பாகக் கருத்துக் கூறிய கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் பாம் ஜில், அங்கு இடம் பெற்ற பல்வேறு மனிதவுரிமை மீறல் குற்றங்கள் குறித்து குறிப்பாக அண்மையில் இடம் பெற்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கைது தொடர்பாக தனது கவலையை வெளியிட்டார்.

யாழ்.பல்கலை மாணவர்கள் கைது தொடர்பாக தனது தொகுதியைச் சேர்ந்த பல பொதுமக்களும் தன்னிடம் தங்கள் கவலையை வெளிப்படுத்தியதாக குறிப்பிட்ட பாம் ஜில், மாணவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான அவர்களது (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வர்த்தக நிலைய முரண்பாடுகள் விரைவில் தீர்க்கப்படும் - டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக இடம்பெறும் நடைபாதை வியாபாரம் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் யாழ்.வர்த்தக சமூகத்தினருடனான உரிமை மாற்றம் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையின் சுற்றறிக்கையின் பிரகாரம் வர்த்தக நிலையங்களின் உரிமை மாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென்றும் அதனை எவ்வாறு சட்டமாக்குவது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் நிரந்தர உரிமை தொடர்பில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவது முக்கியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் கடந்த 1990-ம் ஆண்டு முஸ்லிம் சகோதர மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டிருந்த நிலையில் அவர்களது வர்த்தக நிலையங்களை தற்போது யாராவது நடத்தும் பட்சத்தில் அவற்றை மீள ஒப்படைக்க வேண்டும்.

கடிதம் அல்லது ஆவணங்களன்றி நடத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படுமென்றும், குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நேர்மையானதும் நியாயமானதுமான முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதேவேளை, உறவினர்களைத் தவிர வேறு யாருக்காவது வர்த்தக நிலையங்களை ஒப்படைக்கும் பட்சத்தில் அதற்கு வாடகை பெற்றுக்கொள்ளப்படுமென்றும் அது விடயம் தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் மாநகர சபை ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

இதேவேளை, நடைபாதை வியாபாரிகளின் அத்துமீறிய வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக வர்த்தகர்களால் பிரஸ்தாபிக்கப்பட்ட போது வெளி மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து அவ்வாறான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

அதேவேளை, வியாபார ஸ்தாபனங்களுக்கு முன்பாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களினதும் அத்துமீறிய வியாபாரிகளினதும் வியாபார நடவடிக்கை முற்றாக தடை விதிக்கப்படுமென்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நடைமுறையில் உள்ளூர் வர்த்தகர்களின் நலன்களை பாதிக்காத வகையில் முடிபு எட்டப்படவேண்டும் என்பதுடன், வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேவேளை, மாநகர சபையினதும் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் ஒத்துழைப்பும் , ஒத்தாசையும் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிரதி முதல்வர் ரமீஸ், மாநகர ஆணையாளர் பிரணவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-6)

## இலங்கை குறித்து

# அவுஸ்திரேலியாவின் முடிபு விவேகமானதல்ல! - கிரீன்ஸ்

(கான்பெரா)

இலங்கை அரசு தொடர்புபட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான முறையீடுகள் அதிகளவில் குவியும் இந்த வேளையில், அந்த நாட்டுடன் அவுஸ்திரேலிய இராணுவ புலனாய்வுத்துறை ஒத்துழைப்பை பலப்படுத்த எடுத்துள்ள முடிபு விவேகமான செயற்பாடல்ல என் அவுஸ்திரேலிய கிரீன்ஸ் கட்சி சாடியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் செனட்டர் லீ ரியானொன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையிலிருந்து வெளியாகும் தகவல்களைத் தமது கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் பொப் காரை நான் வலியுறுத்துகின்றேன்.

போருக்குப் பிந்திய இச்சம்பவங்கள் தொடர்பாக அவுஸ்திரேலியாவில் வசிக்கும் அநேக தமிழர்கள் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளனர். இச்சம்பவத்தில் இவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளார்கள் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக தமது பயணத்தின் போது இலங்கை அதிகாரிகளுடன் பேசுமாறும், கடந்த வாரம் அமைச்சர் பொப் காரை கிரின்ஸ் கட்சித் தலைவர் கிறிஸ்டினி மில்னி பெரிதும் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், பாரபட்சம், சித்திரவதை, காணாமற்போகுதல், ஆட்கடத்தல்கள் ஆகியவை குறித்தும் அதிகாரிகளுடன் பேசுமாறும் அவர் அமைச்சரிடம் கோரியிருந்தார். சமீபத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் சங்கச் செயலாளர் கைது செய்யப்பட்டு இலங்கை பயங்கரவாத விசாரணை திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா சமாதானத்தை ஊக்குவிப்பதிலும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒரு நாடு.

இச்சமயத்தில் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகளைக் கண்டு கொள்ளாத ஒரு நிலைப்பாட்டில் இராணுவ உறவுகளைப் பலப்படுத்த முனைகிறார் வெளிவிவகார அமைச்சர் பொப் கார். இது விவேகமான ஒரு செயலாகாது என ரியானொன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# பதுளை, பசறை பகுதியில் திடீர் மண்சரிவு

## தந்தையும் இரு பிள்ளைகளும் பலி

(பதுளை)

பதுளை பசறைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தந்தையும், 10, 14 வயது பிள்ளைகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பசறை கோனவில பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்ணில் புதையுண்டே குறித்த மூவரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மாத்தளை நிக்கலோயா பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவில் லயன் அறைகள் புதையுண்டுள்ளன.

இப்பிரதேச மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ந-11)

# கடன் பிணக்கு முற்றியதில் குடும்பஸ்தர் வடிகானில்

(யாழ்ப்பாணம்)

கடன் பிணக்கு காரணமாக ஏற்பட்ட முரண்பாடு முற்றியதில் மோட்டார் சைக்கிளுடன் சேர்த்து குடும்பஸ்தர் ஒருவர் வடிகாலினுள் தள்ளி விழுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வேம்படி வீதியில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப குடும்பஸ்தர் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது வேறு மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவரால் வீதிக்கு அருகிலிருந்த வடிகானினுள் தள்ளி விடப்பட்டுள்ளார்.

வடிகானினுள் விழுந்த குடும்பஸ்தர் காயங்களுக்கு உள்ளானதோடு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

காயத்துக்கு உள்ளான குடும்பஸ்தர் பயணித்த மோட்டார் சைக்கிளும் வடிகானினுள் விழுந்து பலத்த சேதத்துக்குள்ளானது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

# கொழும்பு-பதுளை வீதியில் மண்சரிவு

(கொழும்பு)

கொழும்பு - பதுளை பிரதான வீதி, பெரகல, ஹப்புத்தளையில் நேற்று முற்பகல் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக குறித்த வீதியினூடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியினூடாகப் பயணத்தை மேற்கொள்ள உள்ளவர்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ந-11)





**ACCA**

**Association of Chartered Certified Accountants**

**கருத்தரங்கு**

பதிவு நடைமுறைகளும் பாட விலக்களிப்புகளும் (IR Procedures & Exemptions)

**திகதி : 27.12.2012 வியாழக்கிழமை 10.00 A.M**

**இடம்: யாழ்ப்பாண தொழில்நுட்ப நிறுவனம்**

**தொழில்சார் கற்கைகள் அலகு**

**(அப்பலோ வைத்தியசாலை முன்பாக பலாலி வீதி)**

**குறிப்பு:** மேற்படி கருத்தரங்கிற்கு HNDA, HNDM, HNDBS, B.Com, BBA, BBM பட்டதாரிகள் கலந்து பயன்பெற முடியும். (1187)



ஈழத்து சிதம்பரத்தில் திருவெம்பாவை காண வாரீர்...

ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை காண வாரீர்
காலனை காலால் உதைத்த ஈசனின் விழா காண வாரீர்
நாளை நமக்கொரு தீர்வருளும் தில்லைக்கூத்தனைக் காண வாரீர்
நாடுமன்பர் துயர்தீர்க்கும் திண்ணபுரத்தான் விழா காண வாரீர்
வாழ வழிகாட்டும் சுந்தரேசன் புகழ்பாட வாரீர்
வாஞ்சையுடன் மார்கழி நீராடி மன்னவன் எழில் காண வாரீர்
ஆழி சூழ் காரை ஊரின் தனிவிழாக் காண வாரீர்
ஆண்டருளும் சௌந்தராம் பிகை சுந்தரேசன் அருள்பெற வாரீர்

- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

(C-1812)

**பருத்தித்துறை நகராட்சி மன்றம் வரவு செலவுத்திட்டம் - 2013**

நகரசபை கட்டளைச்சட்டம் 255ஆம் அதிகாரம், பிரிவு 178(3) இற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 20.12.2012ஆம் திகதியிலிருந்து பொதுமக்கள் பார்வைக்காக நகராட்சிமன்ற அலுவலகத்தில் வைக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

சபா ரவீந்திரன் (J.P.U.M)
நகரபிதா,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

(C - 1810)

**பாராட்டுகின்றோம்**



நிலான்குமார் தமிழ்செல்வி
துஸ்யந்தன் தர்சினி
புனிதசீலன் தர்சினி

20.12.2012 அன்று யா / வீரசிங்கம் மண்டபத்தில் முன்பள்ளி ஆசிரியர் டிப்ளோமா பட்டம் பெறும் யா / புனித மரியன்னை பேராலய முன்பள்ளி ஆசிரியர்களான நிலான்குமார் - தமிழ்செல்வி, துஸ்யந்தன் - தர்சினி, புனிதசீலன் தர்சினி ஆகியோரை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைமையை தமிழ்செல்வி
தானெடுத்து
மறைக்கல்வியை பு.தர்சினி
முன்னெடுத்து
செயல்திறமையாய் து.தர்சினி
அரவணைத்து
இசையாலும் அசைவாலும்
வசப்படுத்தி
திசை நாலும் திகிகெட்டும்
புகழ்பரப்பி
அசையாது பணி செய்து
பல்லாண்டு வாழ்க...

பெற்றோர்கள், நலன்விரும்பிகள்

1186


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூன்று குருமார்கள்

ஒரு ஊரிலே ஞானி ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹாசன். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டது. அவரது முதுமைக்காலத்தில் அவரிடம் சிலர் வந்தார்கள்.

அவர்கள் ஞானியிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, அவர்கள் "உங்கள் குரு யார்?" என்று கேட்டார்கள்.

ஞானி எழுந்து நிமிர்ந்து அமர்ந்திருந்து "எனக்கு ஆயிரக்கணக்கான குருமார்கள் இருக்கிறார்கள். அவர்கள் பற்றிச் சொல்வதென்றால் காலம் போதாது. ஆனால், முக்கியமான மூன்று பேர் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி உங்களுக்கு நான் சொல்கிறேன்" என்றார்.

அவர் கூற ஆரம்பித்தார். அந்த மூன்று பேர்களில் ஒருவன் திருடன்.

நான் ஒரு சமயம் பாலைவனம் வழியாகச் சென்று கொண்டிருந்தேன். அப்போது வழி தவறி ஒரு கிராமத்தினுள் சென்று விட்டேன். அது இருட்டு நேரம்; நடு இரவு; ஊரே உறங்கிப் போய் இருந்தது.

அவ்வேளையில் ஒரு நபர் மட்டும் வீட்டின் சுவற்றில் ஏதோ செய்து... உள்ளே நுழைய முயற்சி செய்துகொண்டிருந்தார்.

நான் அவனிடம் சென்று "இன்றிரவு இந்தக் கிராமத்தில் எங்கே தங்கமுடியும்?" என்று கேட்டேன்.

அதற்கு அவன், "இந்த நடுநிசி வேளையில் அது மிகவும் சிரமமான காரியம்... ஒரு திருடனோடு உங்களால் தங்கமுடியுமானால் நீங்கள் என்னோடு தங்கலாம்" என்றான்.

நான் அவனுடன் ஒரு மாதகாலம் தங்கியிருந்தேன்.

ஒவ்வொரு நாள் இரவும் அவன், "இப்போது நான் என்னுடைய வேலைக்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுச் செல்வான்.

அவன் திரும்பி வந்ததும் "இன்று உனக்கு ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்பேன்.

அத்றகு அவன், "எதுவுமே கிடைக்கவில்லை. நாளைய தினம் மறுபடியும் முயற்சி செய்வேன்" என்று சொல்வான்.

அவன் ஒருபோதும் நம்பிக்கை இழந்ததே கிடையாது. எப்போதும் மகிழ்ச்சியாகவே இருந்தான். ஆனால், ஒன்றுமே நடைபெறவில்லை. அதனால் மனம் வருந்தினேன். நம்பிக்கை இழந்து விடுவேன். அதுபோன்ற சமயங்களில் எல்லாம் அந்தத் திருடனுடைய விடாமுயற்சிதான் என் நினைவுக்குவரும்.

என்னுடைய இரண்டாவது குரு–ஒருநாய்.

ஒரு சமயம் எனக்கு மிகவும் தாகமாக இருந்தது... ஒரு நதியை நோக்கி போய்க் கொண்டிருந்தேன். அப்போது அங்கு ஒரு நாயும் வந்தது. அதற்கும் தாகம். அது ஓடி வந்து ஆற்றைப் பார்த்தது. நாயின் நிழல் ஆற்றில் தெரிந்தது. அதைப் பார்த்து நாய் பயந்து விட்டது. குரைத்தது; திரும்பி ஓடியது; ஆனாலும் அதற்குத் தாகம் அதிகமாக இருந்ததால் அது மறுபடியும் திரும்பி வந்தது... இப்படியாக சில தடவை செய்தது... இருந்தாலும் கடைசியில் அது தண்ணீரில் குதித்தது. இப்போது அதனுடைய உருவம் மறைந்து விட்டது.

"எவ்வளவுதான் பயம் இருந்தாலும் கூட ஒருவன் தைரியமாகக் காரியத்தில் இறங்க வேண்டும்" என்று புரிந்து கொண்டேன்.

இந்தப் போதனை எனக்கு அந்த நாயிடமிருந்து கிடைத்தது.

என்னுடைய மூன்றாவது குரு– ஒரு சிறிய குழந்தை.

நான் ஒரு சமயம் நகரத்திற்குச் சென்றேன்.

அங்கு ஒரு குழந்தை எரிந்து கொண்டிருந்த மெழுகுதிரியை எடுத்துக் கொண்டு வந்தது.

நான் அந்தக் குழந்தையிடம் வேடிக்கையாக, "பாப்பா! இந்த மெழுகுதிரியை நீயாகவே கொளுத்திக் கொண்டாயா?" என்று கேட்டேன்.

அதற்கு, "ஆமாம்!" என்று குழந்தை பதில் கூறியது.

சரி... இந்த மெழுகுதிரி இதற்கு முன்பு எரியாமல் இருந்தது... இப்போது எரிகிறது... இதற்கு வெளிச்சம் எங்கிருந்து வந்தது என்று எனக்குக் காட்ட முடியுமா?" என்று வினவினேன்.

அதற்கு அக்குழந்தை சிரித்தபடியே மெழுகுதிரியை ஊதி அணைத்துவிட்டு, "இப்போது இந்த மெழுகுதிரியின் வெளிச்சம் போனதைப் பார்த்தீர்கள். அது எங்கே போனது என்று எனக்குச் சொல்லுங்கள்" என்று என்னிடம் கேட்டது.

அக்குழந்தை இவ்வாறு கேட்டதும் என்னிடம் இருந்த ஆணவம் அழிந்து விட்டது. என்னுடைய முட்டாள்தனத்தை நான் உணர்ந்தேன்!

மேற்கூறிய விபரங்களை அந்த ஞானி தன்னிடம் வந்தவர்களுக்கு விளக்கமாகக் கூறினார்.

அதனால் நாம் இவர்களிடம் இருந்துதான் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது கிடையாது. யாரிடமிருந்தும் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய எதையும் கற்றுக் கொள்ளலாம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

### ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ்

# இணைக்கப்பட்ட பாடசாலைகள் முதலாம் தரத்திற்கு விண்ணப்பம் கோருவது ஏன்?

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தெரிவாகிய இப்பாடசாலைகளின் வேலைத்திட்டம் 2013 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஆயினும் இப்பாடசாலைகள் தரம் 1 இற்கு அனுமதிகோருவதாக ஊட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம்குறித்துமேலும்தெரியவருவதாவது, வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் இருந்து ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் சில பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2013 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரும் வகையில் உள்வாங்கப்பட்டுள்ளன. ஆயினும் இப் பாடசாலைகள் ஆரம்பப் பிரிவு தரம்–1 இற்கு மாணவர்களை இணைக்க முடியாது என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் உடன்படிக்கையும் செய்திருந்தனர்.

இந்நிலையில் இப் பாடசாலைகள் தரம்–1 மாணவர்களை இணைப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் ஆரம்ப பாடசாலைகளாகிய ஊட்டப் பாடசாலைகள் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலும் அபிவிருத்தி அடைய முடியாத நிலையிலும் காணப்படுவதாக பாதிக் கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இவ்அனுமதிக்கான ஒத்துழைப்பை வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள சில கல்வி அதிகாரிகள் வழங்குவதாகவும் அதிபர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ–3–266)

## பொது இடங்களிலும் புகைபிடிக்கப்படுகின்றன மக்கள் குற்றச்சாட்டு

பகிரங்க இடங்களில் புகைப்பிடித்தலுக்கு தடை விதிக்கப்பட்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலும் மக்கள் கூடும் இடங்களில் புகைப்பிரியர்கள் புகைபிடிப்பதை அவதானிக்க முடிகிறது.

இதனால் பேருந்து நிலையங்கள் இதேபோன்று மக்கள் கூடுதலாக கூடும் இடங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது. எனவே, இந்த விடயத்தில் உரிய தரப்பினர் உடன் விரைந்து இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ–3–254)

## தங்க பிஸ்கட் கடத்திய இந்திய பிரஜை கைது

இந்தியப் பிரஜையொருவர் தங்க பிஸ்கட்டுக்களை மலவாயிலில் மறைத்துக் கொண்டு சென்றபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் சுங்க அதிகாரிகளால் நேற்று ஒரு மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு மலவாயிலில் மிகவும் சூட்சுமமான முறையில் கொண்டு சென்ற தங்க பிஸ்கட்டுகளின் நிறை 408 கிராம் எனவும் இதனுடைய பெறுமதி 26 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாவெனவும் விமான நிலைய செய்திகள் தெரிவித்துள்ளன.

31 வயதுடைய இந்திய பிரஜையொருவரே இவ்வாறு தங்க பிஸ்கட்டுகளை வைத்துக்கொண்டு இலங்கையிலிருந்து சென்னைக்கு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

மேற்படி நபரை கைது செய்த விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ–2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 100-110 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 350 |
| தக்காளி | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 120 | 140 |
| பூசணி | 30 | 50 | 60 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 170 | 180 | 140 |
| பெரிய வெங்காயம் | 130 | 180 | 120 |
| பாகற்காய் | 90 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 140 | 120 | 90 |
| லீக்ஸ் | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | 200 | -- |
| போஞ்சி | 60 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 90 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30-35 |

## இராசி பலன்

*19.12.2012*
*(மார்கழி 04, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு*
*சப்தமி பின்னிரவு 4.25 மணிவரை*
*சதயம் பிற்பகல் 1.29 மணிவரை*
*இராகுகாலம் 12.24-1.54 மணிவரை*
*சுபநேரம் 4.54-6.24 மணிவரை*
*திருவெம்பாவை பூஜை ஆரம்பம்.*

**மேடம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்பாராத வகையில் முக்கிய பிரமுகர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** அந்நியர் உதவியுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், தந்தை வழியில் தனவரவுகள் கிடைக்கலாம்.

**மிதுனம்** செய்தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பகையொன்று நட்பாகலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள்.

**கடகம்** உதவுவதாகச் சொன்ன உறவினர் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும்.

**சிங்கம்** கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.

**துலாம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், தாய்வழி ஆதரவு பெருகும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், வியாபார விருத்தியுண்டு, மக்கட் செல்வங்களால் மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்** எடுத்த கருமங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**மகரம்** தொலைபேசி வழியில் வரும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வருமானம் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**வளவன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் ஏசியா பவுண்டேசனின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பழங்கிணற்றடி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஏசியா பவுண்டேசன் பணிப்பாளர் அன்ரன் நல்லதம்பி, சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன், நல்லூர் பிரதேச சபை உப தவிசாளர் திருமதி கோ.ரவிதாஸ், நல்லூர் பிரதேச சபை கௌரவ உறுப்பினர் கி.தர்மரட்ணம், பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலக முகாமையாளர் எஸ்.சிவானந்தன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கி.சத்தியலோகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)



நன்றி:-மிரர்

## நல்லூர் பிரதேச சபையின் வ.செ.திட்டம் பார்வைக்கு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கொக்குவில் கருவப்புலம் வீதியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகம், திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபை உப அலுவலகம், கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள கொக்குவில் உப அலுவலகம், கோண்டாவில் பொது நூலகம், கொக்குவில் பொது நூலகம், நல்லூர் பொது நூலகம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இவ் வரவு செலவு திட்டத்தை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## நோயாளர் நலன்புரிச்சங்க நிர்வாகிகள் தெரிவு

(மல்லாகம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் தெல்லிப்பழை வைத்தியசாலை மண்டபத்தில் வைத்திய கலாநிதி எம்.உமாசங்கர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் நடப்பாண்டுக்கான தலைவராக வைத்தியகலாநிதி எம்.உமாசங்கர், உப தலைவராக பொ.கமலநாதன், செயலாளராக ந.நவரத்தினராசா, உபசெயலாளராக எஸ்.செல்வரத்தினம், பொருளாளராக எஸ்.றொபின்சன் ஆகியோரும் கணக்காளராக காஞ்சனாவும் மேலும் 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-9-21)

## காரை ம.மே.கழகத்தின் ஆண்டு பொதுக்கூட்டம்

(காரைநகர்)

காரை மத்தி மேம்பாட்டு கழகத்தின் 7 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

காரை மத்தி மேம்பாட்டு கழக தலைவர் ந.கிருஷ்ணபவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினர்களாக காரை மத்தி கிராம அலுவலர் சி.சுமந்திரன், காரை மத்தி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.தேவமலர், காரை மத்தி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திருமதி த.இராஜேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப் பொதுக்கூட்டத்தில் இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கழக எல்லைப் பரப்பிற்குரிய 6 மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-3-246)

# கொலைக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபர்களுக்கு பிணை

## யாழ்.மேல் நீதிமன்றம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவியை கற்பழித்து கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூவருக்கு யாழ். மேல் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

2010 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ஆம் திகதி புலோலி தெற்கைச் சேர்ந்த அரியநாயகம் துளசி( வயது19) என்ற பெண்ணை கற்பழித்து கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டப்பட்டு சந்தேகத்தின் பேரில் கணேஸ்-ஜெயசீலன், இலங்கநாதன்- உதயகுமார் ஆகிய இருவரும் குறித்த கற்பழிப்புக்கும் கொலைச் சம்பவத்திற்கும் உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் இவர்களின் உறவினரான இலங்கநாதன் புஸ்பராணி உள்ளிட்ட மூவரும் பருத்தித்துறை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த கொலை வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் யாழ். மேல் நீதிமன்றிற்கு பாரப்படுத்தப்பட்டு சந்தேக நபர்கள் மூவருக்கும் எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்குமாறு பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த பிணை விண்ணப்பம் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதில் சந்தேக நபர்களை நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிப்பதற்கு அனுமதித்த ஆணையாளர் முதலாம் சந்தேக நபரான இலங்கநாதன் புஸ்பராணி என்பவரை இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையிலும் இரண்டாம் சந்தேக நபரான கணேஸ் ஜெயசீலன், மூன்றாம் சந்தேக நபரான இலங்கநாதன் உதயகுமார் ஆகிய இருவரையும் தலா 30 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

இதில் குறித்த மூவருக்கும் பிணை நிற்கும் பிணையாளர்கள் யாவரும் கிராம சேவகரினால் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவர்கள் என உறுதிப்படுத்தப்படுவதோடு 2 இலட்சம் ரூபாவிற்கு உரித்துடையவர்கள் என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

பிணையாளர்கள் அல்லது எதிரிகள் இருப்பிடம் மாறுகின்ற போது அது தொடர்பில் யாழ்.மேல் நீதிமன்ற பதிவாளருக்கு அறியத்தரப்படல் வேண்டும் எனவும் சந்தேக நபர்கள் ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையன்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடல் வேண்டும் என நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ்.ஸ்ரெலஸ்ரினும் மனுதாரர் சார்பில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும் ஆஜராகி இருந்தனர். (அ-4)




# தாதியர்களின் சுகவீன விடுப்பு போராட்டம் இன்று தொடரும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ ஆய்வு கூட பணியாளர்கள் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் புறக்கணிப்பு போராட்டம் நாட்டின் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து பிரதேசங்களிலும் உள்ள வைத்தியசாலைகளிலும் இடம்பெற்றன.

பல்கலைக்கழகங்களில் இணை மருத்துவ பட்டம் பெற்ற மாணவர்கள் 2 வருடங்களாகியும் எமது சேவையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. அவர்கள் உள்வாங்கக்கூடிய நடவடிக்கையினை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்களுக்கான கல்வித்தகுதி கட்டாயமாக்கப்படல் வேண்டும். சில தகுதியற்ற நிறுவனங்கள் க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாடப்பிரிவில் இரு பாடம் சித்தியெய்தியவர்களையும் இப்பட்டப்படிப்பிற்குள் உள்வாங்கி தகுதியற்ற ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குகின்றனர்.

இது நிறுத்தப்படல் வேண்டும். தகுதியற்றவர்கள் மருத்துவ ஆய்வு கூடத்தினை ஆரம்பித்து இவற்றுள் தகுதியற்றவர்களினை உள்வாங்கி இச் சேவையினை மட்டுப்படுத்துகின்றனர்.

இவை தடுக்கப்படல் வேண்டும் எனப் பல கோரிக்கைகளை முன்வைத்து இச்சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் இப் போராட்டத்தின் போது உயிர்க்காப்பு நடவடிக்கையினை நஎம் நோயாளர் நலன் கருதி மேற்கொண்டதாகவும் யாழ்.போதனாவின் மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப் பணிப்புறக்கணிப்பினால் இரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை உட்பட சில சிறிய பரிசோதனைக்காக வந்திருந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியிருந்தனர். இதேவேளை, இன்றைய தினம் அரச தாதிய உத்தியோகத்தர்கள் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதனால் அவசர நோயாளர் மட்டுமே பார்வையிடப்படுவர் எனவும் வெளிநோயாளர்கள் பிரிவு உட்பட பெரும்பாலான பிரிவுகள் இயங்காது எனவும் அரச தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் நோயாளர்கள் வீண் அலைச்சலினை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (அ-4)

# சாவ.நகர சபையின் பாதீடு நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் அடுத்த வருடத்திற்கான உத்தேச வரவு செலவுத்திட்டம் கடந்த 14 ஆம் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அடுத்த வருட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு அபிவிருத்தி வேலைகளுடன் நகர சபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகள் தொடர்பாக திட்டங்கள் தீட்டப்பட்டன.

அடுத்த வருடத்திற்கான உத்தேச மொத்த வருமானமாக 14 கோடியே 28 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் உத்தேச மொத்த செலவினமாக 14 கோடியே 28 இலட்சத்து [illegible] ஆயிரம் ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி வேலைகளுக்காக சபை உறுப்பினர்களால் வழங்கப்பட்ட 23 வீதி அபிவிருத்தியும் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் 7 வேலைத் திட்டங்களும் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சேவை மேம்பாட்டு திட்டத்தில் 5 வீதிகளும் அரச நன்கொடையில் இருந்து ஒரு வேலைத் திட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளதாக நகர சபைத்தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போது தெரிவித்தார். இவ் வரவு செலவுத் திட்டம் சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (அ-3-29)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழின படுகொலையில் ஐ.நா. அதிகாரிகளுக்கும் தொடர்பு

## விசாரிக்க கோருகிறது மே 17 இயக்கம்

இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையில் ஐ.நா. அதிகாரிகளான பான் கீ மூன், யோன் ஹோம்ஸ், விஜய் நம்பியார் ஆகியோரை குற்றவாளிகளாக விசாரிக்க கோரி சென்னையில் மே17 இயக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இதன்போது மே17 இயக்கத்தின் உறுப்பினர் உமா உரையாற்றுகையில், கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கையில் இனப் படுகொலை நடக்கப்போகிறது என இனப்படு கொலை தடுப்பு அதிகாரி ஃபிரான்ஸ் டெங் அளித்த அறிக்கை புறக்கணிக்கப்பட்டது.

மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் (OCHA-Office for the Coordination of Humanitarian Affairs) அதிகாரி யோன் ஹோம்ஸ் அபயக் குரல் எழுப்பி தமிழர்கள் அனுப்பும் மின்னஞ்சலை படிக்காமலே அழித்து விடுவேன் எனக் கூறினார்.

பான் கீ மூனின் உதவியாளர் மிச்செல் மோண்டாஸ், போரில் எத்தனை தமிழர்கள் உயிரிழந்தார்கள் எனக் கேட்டதற்கு உடல்களை எண்ணுவது எங்கள் பணியல்ல என்று கூறினார்.

போரில் நடக்கும் படுகொலைகளை தடுக்க போர் முனைக்கு சென்று கவனிக்க வேண்டிய இலங்கைக்கான ஐ.நாவின் உயர் அதிகாரி விஜய் நம்பியார் தட்ப வெப்பம் சரியில்லாததால் போகவில்லை என கூறினார்.

ஒரு நாட்டில் நடக்கும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க அயல் நாட்டு அதிகாரிகளை நியமிப்பதில்லை என்பதை மீறி பான் கீ மூன் இந்தியரான விஜய் நம்பியாரை இலங்கையில் நியமித்தார்.

இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் என மனித உரிமைகள் அவையின் நவநீதம்பிள்ளை உள்ளிட்டோர் கூறிய போது அதை தடுத்தவர்கள் பான் கீ மூன், விஜய் நம்பியார் மற்றும் யோன் ஹோம்ஸ் போன்றோர். இறுதிக் காலங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையை வெளியிடாமல் விஜய் நம்பியார் மற்றும் யோன் ஹோம்ஸ் தடுத்தனர் என்பன போன்ற விபரங்களை கூறினார்.

இதேவேளை, இக்கூட்டத்தில் தமிழினப் படுகொலையில் ஐ.நா. உயர் அதிகாரிகள் இலங்கைக்கு துணை நின்றதற்கான ஆதாரங்களும் வழங்கப்பட்டன. சமீபத்தில் சார்ளஸ் பெட்ரி வெளியிட்ட இலங்கை பற்றிய ஐ.நா. உள் விவகார அறிக்கையில் மறைக்கப்பட்ட விடயங்களும் வெளியிடப்பட்டன. (அ-2)

## இளைஞர் விருது விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலக இளைஞர் விருது விழா இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபாலா, கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்பாட்டுப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ஷ, யூ.எஸ்.எயிட் பிராந்திய திட்ட முகாமையாளர் ஸ்ரீமதி டோன் ஷேடன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# 9 இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை

இவ்வாண்டில் 9 இலட்சத்து 50 ஆயிரம் ஆவது சுற்றுலாப் பயணி நேற்றுக் காலை 8.25 மணிக்கு இலங்கையை வந்தடைந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை அறிவித்துள்ளது.

இவ்வாண்டு நிறைவடைய இன்னமும் 12 தினங்கள் எஞ்சியுள்ள நிலையில் 5 ஆண்டுகளுக்கான சுற்றுலா திட்டத்தின் அடிப்படையில் இந்த இலக்கு இவ்வருட நிறைவில் எய்தப்பட திட்டமிடப்பட்டிருந்தது.

இறுதியாக எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் மொத்தமாக 80 ஆயிரத்து 379 சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்திருந்தனர். இதன் மூலம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 7 இலட்சத்து 74 ஆயிரத்து 151 ஆக அதிகரித்திருந்தது.

2011 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாப் பயணிகள் இலக்கான 8 இலட்சத்தை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி இலங்கை எட்டியிருந்தது. (அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நிலையத்தின் அங்கத்தவரும் யாழ். மத்திய கல்லூரி மாணவனுமான செல்வன் இளங்கோவன் சாந்தகோபி 22.09.2012 இல் மருதானை ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் 120 கிலோ பளு தூக்கி முதலாம் இடத்தைப் பெற்று தங்கம் வென்று எமக்கு பெருமை சேர்த்தவரை நாமும் பாராட்டுவதோடு மேலும் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

நிர்வாகம், ஜனசக்தி ச.ச.நிலையம்,
308, அரசடி வீதி
நல்லூர். (சி/1182)


# தோற் பயிற்சி நிலைய திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

வட்டு கிழக்கு அந்திரான் கிராம ஜனசக்தி நிலைய தோற்பயிற்சி திறப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஜனசக்தி சனசமூக நிலைய தலைவர் இ.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி வலிகாமம் வலய பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)


## ஊர்காவற்றுறை பிரதேச சபை வரவு செலவுத்திட்டம்-2013

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வரவு செலவுத்திட்டத்தை 19.12.2012 ஆம் திகதியில் இருந்து 25.12.2012 ஆம் திகதி வரை சபையின் தலைமை அலுவலகம் மற்றும் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு உப அலுவலகங்களிலும் பொது நூலகங்களிலும் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

ம.ஜெயகாந்தன்
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.

(இ-1809)



## இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 12 இல் செவ்.<br>உயரம்: 5'8"<br>தொழில்/ தகைமை: O/L, வியாபாரம்<br>தொ. இல: B -796 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 7இல் செவ்.<br>உயரம்: 5' 3''<br>தொழில்/ தகைமை:B.BM வங்கி உத்தியோகத்தர்<br>தொ. இல: G -800 |
| பிறப்பு: 1981இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்: 5'11"<br>கி.பா: 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: Diploma In computer காப்புறுதி ஆலோசகர்<br>தொ. இல: B -797 | பிறப்பு: 1992 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா: 7 இல் செவ்.<br>தகைமை: A/L<br>தொ. இல: G -801 |
| பிறப்பு: 1970இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 4<br>உயரம்: 4' 5"<br>தொழில்/ தகைமை: Accounter (statard)<br>தொ. இல: B -798 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா.:41, 2 இல் செவ்.<br>உயரம்: 5' 6"<br>தொழில்/ தகைமை: BSc, MSc (UK Student visa)<br>தொ. இல: G -802 |
| பிறப்பு: 1982 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>உயரம்: 5'6"<br>தொழில்/ தகைமை: CTB கணக்காளர்<br>தொ. இல: B -799 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5' 4"<br>தொழில்/ தகைமை:முகாமைத்துவ பட்டதாரி<br>தொ. இல: G -803 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)



மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் பாதுகாப்பு நலன்புரி போன்றவற்றுக்கு மத்திய அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மீனவர்களின் பாதுகாப்பு தொடர்பில் இலங்கையுடன் அடிக்கடி இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகிறது.

இருதரப்பு பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் எண்ணிக்கை கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இரு நாட்டு மீனவர்களும் பாதுகாப்பான முறையில் மீன்பிடியில் ஈடுபடத் தேவையான ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வன்னி மக்கள் முன்னேற்ற கழகம் அங்குரார்ப்பணம்

(பூந்தோட்டம்)

வன்னி மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு வன்னி மக்கள் முன்னேற்ற கழகமொன்று வவுனியாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதாக அதன் ஒருங்கிணைப்பு செயற்பாட்டாளர் சி.சிவசோதி தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஊருக்கு ஒரு பட்டதாரியை உருவாக்குதல், வளவிலும் வீதியோரங்களிலும் மரங்களை நாட்டல், சிறந்த தலைமைத்துவத்தை இனம் காணல், கல்வி கலாசார விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், விளையாட்டுத்துறை சார்ந்த வீரர்களை தேசிய மட்டத்தில் இனம் காட்டல், விவசாய விலங்கு வேளாண்மையை ஊக்குவிக்க செயற்றிட்டங்களை உருவாக்குதல், ஊழல் சமூக விரோத செயல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றை இனம்கண்டு உரிய முறையில் அணுகுதல், தேசிய முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல், பிறப்பு,இறப்பு பதிவு, ஆளடையாள அட்டை, திருமண பதிவு, காணி உறுதிப்பத்திரம், தேர்தல் இடாப்பு பதிவு ஒழுங்குபடுத்த ஆலோசனை கொடுத்தல், ஏனைய மக்கள் சார்ந்த கழகங்கள், நிறுவனங்களுடன் ஒரு பொது உடன்பாட்டில் சேர்ந்து கொள்ளல், வேலை வங்கிகளை தோற்றுவித்து பொருளாதார மையம் ஒன்றை உருவாக்குதல் என்ற நோக்கங்களை அடிப்படையாக கொண்டு அரசியல் கலப்பில்லாமல் வன்னி மக்களின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்படவுள்ளதாகவும் ஒருங்கிணைப்பு செயற்பாட்டாளர் தெரிவித்தார். (அ-9-266)

# வெள்ளைவான் கலாசாரத்தை மீண்டும் தோற்றுவிக்காதீர்!

## ஐ.தே.க.பொதுச்செயலாளர் வலியுறுத்து

இந்த நாட்டுக்கு மீண்டும் வெள்ளைவான் கலாசாரத்தை கொண்டுவரக்கூடாது என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை குறித்து குரல் கொடுத்துவரும் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க மீது தாக்குதல் முயற்சி மேற்கொண்டதன் மூலம் அரசாங்கத்தின் கொலை நடவடிக்கைகள் வெளியாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத்தை பயமுறுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக கொழும்பில் நேற்றையதினம் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

நீதித்துறை சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இந்த நாட்டுமக்களின் எண்ணம் எனக்கூறிய அவர் அந்த எண்ணத்தை அழிக்க அரசு முயற்சிப்பதாக குற்றம் சுமத்தினார்.

இதேவேளை, க.பொ.த சா/த பரீட்சை விஞ்ஞான வினாப்பத்திரம் முன்னதாகவே வெளியாகியுள்ளதென்று எழுப்பப்படும் குற்றச்சாட்டை பரீட்சைகள் திணைக்களமே ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அது குறித்து விசாரணை நடத்துமாறு இரகசிய பொலிஸாருக்கு முறையிடப்பட்டுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

வினாத்தாள் முன்னதாகவே வெளியாகும் முறை கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக இடம்பெற்று வருவதாகவும் அரசாங்கத்தால் இதனைத்தடுக்க முடியாது போயுள்ளமை கல்வித்துறையில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இல்லாதொழித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# விரிவுரையாளர் பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் தீர்வு

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் தமது சம்பள பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும். இவ்வாறு நிதி அமைச்சின் செயலாளர் தங்களிடம் உறுதி அளித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் நிதி அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் குறிப்பிட்டுள்ளார்.

சம்பள உயர்வு குறித்த சுற்றறிக்கை இவ்வருட இறுதிக்குள் வெளியிடப்படும் என இதன்போது நிதி அமைச்சின் செயலாளர் வாக்குறுதி அளித்ததாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# முல்லைத்தீவு- மாங்குளம் வீதி போக்குவரத்து சீராகவில்லை

## அரச ஊழியர்கள் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு- மாங்குளம் போக்குவரத்து சீரின்மையால் மாங்குளத்தில் உள்ள அரச அலுவலகங்களுக்கு செல்லும் அரச ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக முல்லை.நகரம், அளம்பில், செம்மலை, சிலாவத்தை, தண்ணீரூற்று, முள்ளியவளை, ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளில் இருந்து மாங்குளத்திற்கு செல்லும் 100 இற்கு மேற்பட்ட அரச ஊழியர்களே போக்குவரத்து சீரின்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பகுதிக்கு தனியார் பேருந்து சேவையில் ஈடுபட்டாலும் நேரம் தாமதமாகி செல்வதால் அரச திணைக்களங்களுக்கு நேரம் தாமதித்தே செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உள்ளது.

இதனால் அரச உயர் அதிகாரிகளின் நச்சரிப்புக்கு உள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

காலை 6.45 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து புறப்பட்டு சிலாவத்தை, மாங்குளம் ஊடாக யாழ்ப்பாணம் செல்வதற்கும் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து 1.30 மணிக்கு புறப்பட்டு மாங்குளத்திற்கு 4 மணிக்கு வந்தடைந்து முல்லைத்தீவு சென்றடைவதற்குரிய அரச பேருந்து சேவை ஒன்றை ஒழுங்குபடுத்தித்தர ஆவன செய்யுமாறு அரச ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(அ-3-267)

# தமிழ் யுவதிகளை கட்டாயப்படுத்தி சிப்பாய்கள் திருமணம் செய்கின்றனரா?

## ஆராயக் கோருகிறார் கருணாநிதி

இலங்கையில் தமிழ் இளம் பெண்களை கட்டாயப்படுத்தி சிங்கள சிப்பாய்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுவதாக கூறப்படுவது பற்றி மத்திய அரசு விசாரித்து உண்மையைக் கண்டறிய வேண்டும் என கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு, ஈழத் தமிழர் ஊடகங்கள் சிலவற்றில் அப்படியொரு செய்தி சில தினங்களுக்கு முன் வெளியாகியிருந்தது. சமூக ஆர்வலர்கள் தெரிவிப்பதாக கூறப்படுகிறது என்று அந்தச் செய்தியின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அண்மையில் மாவீரர் தினத்தன்று விளக்கேற்றிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர் எனவும் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் என்பதன் சுருக்கமான யாழ். என்று கூறினாலே சிங்களவர்கள் கோபப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலக தமிழ் மாநாட்டின் போது தமிழ் அறிஞர்கள் தாக்கப்பட்டனர். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது எனவும் அவர் நினைவூட்டினார்.

இவை தொடர்பில் இந்திய அரசாங்கம் ஆராய்ந்து இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் இவ்வாறான நிகழ்வுகளை நிறுத்துவதற்கு இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும் என்றும் கருண்ாநிதி வலியுறுத்தியுள்ளார். (அ-2)


# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச செயலகம் சங்காணையிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட மக்களின் நலன் கருதி நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடமாடும் சேவையை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளதாக பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

இந்நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள், உத்தேச வயதுச் சான்றிதழ் தொடர்பான விபரங்கள் திரட்டப்படவுள்ளது. எனவே, மேற்படி பதிவுகள் பெற விரும்புபவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.(அ-9)







இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு சமுர்த்தி கொடி தின வேலைத்திட்டத்தில் தேசிய ரீதியில் நல்லூர் பிரதேச செயலகம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. இவர்களுக்கான விருது கம்பஹாவில் நடைபெற்ற சமுர்த்தி எழுச்சி விழாவின் போது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி யோ.ராகினி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.பிரபாகரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் மாத இராசி பலன்

# 16.12.2012-13.01.2013

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்**

**நண்பர்கள்மூலம் நல்ல தகவல் கிடைக்கும்! நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியாக வாழ கற்றுக் கொண்டிருக்கும் கும்ப இராசி நேயர்களே!**


மார்கழிமாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்திலேயே குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். சனி உச்சம் பெற்று இராகுவுடன் இணைந்து ஒன்பதில் சஞ்சரிக்கிறார். எனவே, ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். வெற்றிக்குரிய தகவல்கள் வீடுவந்துசேரும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

புத சுக்கிர யோகம் செயற்படும் மாதம் இது என்பதால் பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். வரவு- செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கல்களில் இருந்த கடன்சுமை குறைய வழி பிறக்கும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் விதத்தில் நண்பர்கள் நல்ல தகவல்களை கொடுப்பர். அரசியல் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அதிகாரிகளால் அனுகூலம் உண்டு.

ஜாமின் கையெழுத்துப் போட்டு பிறருக்கு வ்ாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும் நேரமிது. மாதத் தொடக்கத்தில் 3,10 க்கு அதிபதி விரய ஸ்தானத்தில் உச்சம் பெறுவதால் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். கூடப் பிறந்தவர்களோடு கூட்டு தொழில் செய்வோர் தனித்து இயங்க முற்படுவர். இடம், பூமி விற்பனை உண்டு. நீண்டநாளாக பேசியும் இந்த இடம் கையை விட்டுப்போகவில்லையே என்று நினைத்த உங்களுக்கு இப்பொழுது நிலம், பூமி விற்பனையும் அதன்மூலம் தன இலாபமும் வந்து சேரும். இந்த நேரத்தில் சகாயஸ்தானத்து கேதுவால் சகாயம் கிடைக்க கேது பரிகாரம் செய்வது நல்லது. இராகு வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

டிசெம்பர 24 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். பஞ்சம அஷ்டமாதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, கொஞ்சம், கொஞ்சமாக நிலைமை சீராகும். கூடுதல் இலாபம் தொழிலில் வந்து சேரும். வெளிநாட்டு தொடர்பால் விருத்தி ஏற்படும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு மாற்று கருத்துடையோரின் மனதையும் மாற்றி வளர்ச்சி காண்பீர்கள். புதிய வாகனங்கள் வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கும். பழைய வாகனங்களின் பழுது செலவுகள் அதிகரிக்கிறதே என்ற கவலை இனி அகலும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவீர்கள்.



**சுகம் தரும் சுக்கிர பெயர்ச்சி**

ஜனவரி 5 ஆம் திகதியன்று தனுசு இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்கி சேர்க்கும் வாய்ப்பு உருவாகும். தாராள மனம் படைத்தோரின் ஒத்துழைப்போடு ஏராளமான நல்ல காரியங்களை செய்ய முன்வருவீர்கள். வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும். வியாபார விரோதங்கள் விலகும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் நீங்கள் செய்யும் நல்ல காரியங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பர். பெற்றோரின் பாசம் கூடும்.

## தொழிலில் கூடுதல் இலாயம் கிடைக்கும்; வெளிநாட்டுத் தொடர்பால் விருத்தியேற்படும்

**மகர புதனின் சஞ்சாரம்**

ஜனவரி 9 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக விபரீத இராஜயோகம் செயற்படப்போகிறது. எனவே, திட்டமிடாது செய்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். மற்றவர்கள் செய்யத் தயங்கிய காரியம் ஒன்றை நீங்கள் தைரியமாக செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள். கடிதம் கனிந்த தகவலைத் தரும்.

இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களை நீக்கும்

இம்மாதம் விரய ஸ்தானம் பலம் பெற்றிருப்பதால் குடும்ப சுமைகூடும். கூடுதல் செலவுகள் ஏற்படும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆதாயம் தரும் காரியங்களில் ஒருசில தாமதங்கள் ஏற்படலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவு கூடும். மாதத்தின் மையப்பகுதியில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்குவரும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி தொகை ஒன்றைசெலவிடும் சூழ்நிலை உருவாகலாம். சர்ப்ப பரிகாரம் செய்வதன் மூலமும் சனிக்கிழமை சனீஸ்வரரை வழிபடுவதன்மூலமும் சந்தோஷத்தை வரவழைத்துக்கொள்ளலாம்.

# சிவல்புரி சிங்காரம்



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**சர்ப்ப தோஷத்தின் பரிகாரம் தேவை! வரவேற்பால் வருபவர்களை திணறடிக்கும் மீன இராசி நேயர்களே!**

மார்கழிமாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இரண்டாமிடத்தில் ராகுவும் எட்டாமிடத்தில் கேதுவும் சஞ்சரிப்பது சர்ப்ப தோஷமாகும். எனவே, ஏற்ற, இறக்கமாக வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் விதத்திலேயே கிரகங்கள் உலாவருகின்றன. இருப்பினும் இராசிநாதன் குரு வக்ரம் பெற்று, சுக்கிரனின் பார்வை பதிவதால் விபரீத இராஜயோகம் செயற்படும் விதத்திலும் இந்தமாத கிரகநிலைகள் அமைந்துள்ளன.

எனவே, எதிர்பாராத சில நல்ல காரியங்களும் இம்மாதம் நடைபெறும். என்ன இருந்தாலும் அஷ்டமத்து சனியின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. செலவு நடைகள் கூடலாம். சிக்கனத்தை கையாள முடியாமல் போகலாம். வரவு செலவுகளில் கூடுதல் கவனம் செலுத்தாவிட்டால் ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும். இக்காலத்தில் துணிவும் தன்னம்பிக்கையும்தான் தேவை.

6 க்கு அதிபதி சூரியன் 10 இல் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் தொழிலுக்காக கடன் வாங்கும் சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகும். பழைய கடன் சுமை அதிகமாக இருக்கிறதே என்று கவலைப்பட்டு பரிகாரங்கள் செய்ய முன்வருவீர்கள். குறிப்பாக கிரகங்கள் வலிமையிழந்திருக்கும் இந்தநேரத்தில் அதை யோசித்து செய்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் உங்கள் சுயஜாதகத்தை ஒருமுறை புரட்டிபார்த்து அதிலுள்ள தெசாபுத்திக்கேற்ற தெய்வத்தை பூஜித்து செய்வது நல்லது. இறைவனது பாடல்களை வாசித்து வழிபடுவதன் மூலமும் அருகில் இருப்பவர்களை நேசித்து உறவு வைத்துக் கொள்வதன் மூலமும் நல்ல வாய்ப்புகளை பெற இயலும். சரப்பதோஷ பரிகாரங்களும் அவசியம் உங்களுக்கு தேவை.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

டிசெம்பர் 24 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். என்றாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்தாலும் அவர்கள் குணம் திருப்தியாக இருக்காது. விவாகம் சம்மந்தமாக எடுத்த பேச்சுகள் விரைவில் முடிவடைவதுபோல தோன்றி காலதாமதத்தை உருவாக்கலாம்.

**தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்**

பெண்வழியில் பிரச்சினைகள் தலை தூக்கும் நேரமிது. பிறர் விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. வாகன மாற்றம், வீடுமாற்றம், ஊர் மாற்றம் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும். எதிர்பாராத விதத்தில் பிள்ளைகளுக்கு செலவுகள் ஏற்பட்டு நெருக்கடி நிலையையும் உருவாக்கும். ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள்.

**மகர புதனின் சஞ்சாரம்**

ஜனவரி 9 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இது கொஞ்சம் உன்னதமான நேரமாகும். காரணம் 2, 9 க்கு அதிபதியான செவ்வாயுடன் சுகாதிபதியாக விளங்கும் புதன் ஒன்று கூடுவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் திடீர் முன்னேற்றம் ஏற்படலாம். வீடு வாங்கும் முயற்சி கைகூடும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு உங்கள் கூட்டாளிகளின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள். இம்மாதம் விநாயகர் வழிபாடும், அனுமன் வழிபாடும் உங்கள் வேதனைகளை தீர்க்கும்.

## எதிர்பாராத சில நல்ல காரியங்கள் நடைபெறும் தொழிலில் முன்னேற்றங்கள் காண்பீர்கள்

இம்மாதம் எதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய மாதமாகும். சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கத்தில் உங்கள் இராசி இருப்பதால் சர்ப்ப பரிகாரம் செய்வதே நல்லது. அள்ளிக்கொடுக்கும் இராகு அஷ்டமத்தில் அல்லவா சஞ்சரிக்கிறது. எனவே, பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். சுபச் செலவுகளை மேற்கொள்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் அனுசரிப்புத் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வதன்மூலம் விருப்பம் நிறைவேறும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதிக்கான புகையிரத சேவைகள் இடைநிறுத்தம்

## காலநிலை சீரின்மை காரணமாக

(பூந்தோட்டம்)

காலநிலை சீரின்மை காரணமாக வட பகுதிக்கு வரும் அனைத்து புகையிரத சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள வவுனியா புகையிரத நிலையத்தின் அதிபர் கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத பற்றுச்சீட்டுக்களை இரத்து செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

குருணாகல் பகுதியில் புகையிரத பாதையை மூடி வெள்ளம் நிற்பதன் காரணமாக புகையிரத சேவைகள் நேற்று முன்தினம் இரவில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து எப்போது சேவைகள் ஆரம்பமாகும் என்பதனை கூற முடியாதுள்ளது. அதிகமாக வெள்ள நீர் வடிந்ததன் பின்னரே அது சாத்தியமாகும் வாய்ப்புள்ளது.

எனவே, தமது பயணங்களுக்கான புகையிரத பற்றுச்சீட்டுக்களை முற்பதிவு செய்து கொண்டவர்கள் அதனை புகையிரத நிலையத்தில் உடன் வந்து இரத்து செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வட பகுதிக்கான புகையிரத சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளமையினால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளதுடன் பேருந்தில் பயணித்தவர்களும் குருணாகல் பகுதியில் போக்குவரத்து நெரிசல் மற்றும் வீதியை மூடிப்பாயும் வெள்ளம் காரணமாக பல மணி நேரம் காத்திருந்ததாகவும் சிலர் தமது பயணங்களை இடைநடுவில் முடித்து திரும்பியதாகவும் தெரிக்கப்படுகின்றது.

இதேவேளை, வவுனியாவிலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. ஆயினும் வெள்ள அபாயம் ஏற்படும் நிலை இதுவரை ஏற்படவில்லை. (அ-9-266)



நடந்த நான்காம் கட்டப்போர் குறித்து Still Counting the Dead என்ற தலைப்பில் பிபிசியின் முன்னாள் செய்தியாளர் பிரான்ஸ் ஹரிசன் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழியாக்கம் ஈழம் சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் என்ற தலைப்பில் கடந்த 15 ஆம் திகதி சென்னையில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வின் போது கவிஞர் சேரன் நூலை வெளியிட மூத்த ஊடகவியலாளர் சதானந்த மேனன் பெற்றுக் கொண்டதை படத்தில் காணலாம்.

# தமிழக மீனவர்கள் 14 பேர் கச்சதீவில் கைதாகினர்

(கொழும்பு)

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 14 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்களை விடுவிக்கக்கோரி தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று மண்டபம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை கடற்படையினர் பிடியில் உள்ள மீனவர்கள் பெயர் விபரம் இதுவரை தெரியவில்லை. தொடர்ந்து இது குறித்து இராமேஸ்வரம், மண்டபம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்பட்டமை மண்டபம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (அ-2)

# கிராமப்புற பாடசாலைகளுக்கு ஆசிரியர் வள பங்கீடு அவசியம்

## வசதி இன்மையைக் காரணம் காட்ட வேண்டாம்- சந்திரகுமார் எம்.பி.

வசதிகள் இன்மையை காரணம் காட்டி கிராமப்புற பாடசாலைகளுக்கான ஆசிரியர் வளங்களை பங்கீடு செய்யாத நிலை மாற்றப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கல்வி தொடர்பான விடயம் ஆய்விற்கெடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில், பின்தங்கிய பிரதேசங்களுக்கு ஆசிரியர் வளங்கள் சீராக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். கிராமப்புற மாணவர்களும் கல்வியால் மேம்பட வேண்டும் என்ற நோக்கில் மாவட்டத்திற்குள் ஆசிரியர் வளங்களை பங்கீடு செய்தல் மற்றும் இடமாற்றங்களை வழங்குவதற்கான அதிகாரத்தினை மாகாண கல்வி அமைச்சிடமிருந்து வலயக்கல்வி பணிமனைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக நாம் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வடமாகாண கல்வி அமைச்சு மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோரிடம் பேசி இவ் அதிகாரத்தினை பெற்றுக் கொடுத்துள்ளோம்.

இதன்போது ஆசிரியர் இடமாற்றங்களில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இடம்பெற மாட்டாது என்ற உத்தரவாதத்தினை நாம் அன்றே வழங்கியிருந்தோம். அக்கொள்கையும் தொடர்ச்சியாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், இன்றும் வலயங்களுக்குள்ளே ஆசிரியர் வளங்கள் குறித்த சில பாடசாலைகளில் மேலதிகமாகவும் கிராமப்புற பாடசாலைகள் ஆசிரியர் வளப்பற்றாக்குறையுடனும் இயங்கி வருகின்றது.

இதற்காக கிராமப்புறங்களில் வசதிகள் குறைவாக உள்ளதாகவும் ஆசிரியர்கள் அங்கு சென்று கடமையாற்ற மறுப்பதாகவும் காரணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இன்றையநிலையில் அக்காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனெனில் தொடரும் அபிவிருத்தி பணிகள் மூலம் அனைத்து பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்பட்டு அவை பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே, காரணங்களை புறம்தள்ளி போரினால் பாதிக்கப்பட்டு கல்விக்காக ஏங்கி நிற்கும் சமூகத்தை மேம்படுத்த ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட முன் வரவேண்டும். அதிகாரிகள் இவற்றை சீர்செய்து கிராமப்புற மாணவர்களின் கல்வியையும் மேம்படுத்துவதற்காக உழைக்க வேண்டும் என்றார். (அ)

# சர்வதேசத்தின் தலையீட்டை அரசாங்கமே தூண்டுகின்றது

## ஐ.தே.க. ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகம் அழிவடையும் என்ற நோக்கத்தில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. நாட்டின் சகல துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் நாடு எந்த திசை நோக்கி நகர்கின்றது என்பது பற்றிய குழப்பத்தில் மக்கள் ஆழ்ந்துள்ளனர்.


ஆசியாவின் ஆச்சரியம், நாடு முன்னோக்கி போன்ற தேவதை கதைகளை பிரசாரம் செய்தாலும் நாடு அதாள பாதாளத்தை நோக்கியே நகர்கின்றது.

நீதிமன்ற கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துமாறு கோரி சட்டத்தரணிகள் போராடுகின்றனர்.

நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

சர்வதேச சமூகம், மனிதவுரிமைப் பேரவை போன்றன நாட்டுக்கு எதிராக சதி செய்வதாக அரசாங்கம் குற்றம் சுமத்துகின்றது.

எனினும் சர்வதேச சமூகம் நாட்டின் விவகாரங்களில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)



கொழும்பு தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ அரங்கத்தில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, கொழும்பு பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆகியோர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# இரும்புப்பாலமும் வெள்ளத்தால் அள்ளுண்டது

(கொழும்பு)

வெள்ளத்தினால் இரும்புப்பாலம் ஒன்று அடித்துச் சென்ற சம்பவம் மஹியங்கனையில் இடம்பெற்றுள்ளது.

மஹியங்கனை- தெய்யத்தகண்டி பிரதான வீதியில் உல்ஹிட்டி எனும் இடத்திலுள்ள பாலமே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளப்பெருக்கினால் 150 குடும்பங்கள் அப்பிரதேசத்தில் நிர்க்கதியாகியுள்ளதாக மஹியங்கனை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த கோரிக்கை

(புளியம்பொக்கணை)

கண்டாவளை பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு ஆகிய பகுதிகளிலேயே இக்கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

இக்கட்டாக்காலி நாய்கள் நோய்த் தன்மையுடைய நாய்களாகவும் கடிநாய்களாகவும் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக உணவகங்களிலும் பொது மக்கள் கூடும் இடங்களிலுமே இக்கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகமாக உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து கட்டாக்காலி நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE MAYA CALENDAR

மாயா நாட்காட்டி ஒரு ஆய்வு

# உலகம் அழியுமா? அழியாதா? புலப்படும் பிரம்மிப்புகள்!

-ராஜ்சிவா- 18

### விஞ்ஞான ஆருடம், கூறுவது

பூமியின் அழிவு பற்றி எம்மிடம் எஞ்சியிருக்கும் கருத்துக்களை நான்காக வகுக்கலாம்.

1.சுனாமி, பூகம்பம் போன்ற தொடர்ச்சியான இயற்கை அழிவுகள்

2. பூமிக்குள் குமுறிக்கொண்டிருக்கும் சூப்பர் வோல்கான் எனப்படும் பாரிய எரிமலைகளின் வெடிப்பு

3. பூமியின் வட- தென் துருவங்களின் இடமாற்றம்.

4. சூரிய வெப்பக்கதிரின் தாக்குதலும் அதன் மூலம் ஏற்படும் மின்காந்த விளைவுகளும்.


ஜெலோ ஸ்ரோனின் பகுதி (பூமிக்குள் இருக்கும் எரிமலைக் குழம்பு)


இவையெல்லாவற்றையும் நாம் சரியாக கவனித்துப்பார்த்தால் இவையெல்லாமே ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட விளைவுகளையே கொடுப்பவை. உதாரணமாக பூமியின் வட-தென் துருவங்கள் இடம்மாறுவதை நாம் கருத்தில் கொள்வோம்.

துருவமாக தற்போது இருக்கும் இடம் வெப்ப பிரதேசமாகவும் வெப்ப பிரதேசம் துருவமாகவும் மாறினால் தற்சமயம் துருவத்திலிருக்கும் பனிக்கட்டிகள் அனைத்தும் கரைந்துபோகும். அவை மட்டும் கரைந்தால் போதும், பூமியின் அத்தனை நிலப்பகுதிகளும் பல நூறு மீற்றார்களுக்கு நீரில் மூழ்கிவிடும். அதன் ஆரம்பக் கட்டமாக ஏற்படுவது, பாரிய சுனாமிகளும் பூகம்பங்களுமாகத்தான் இருக்கும். மாயன்களிடமிருந்து கிடைத்த நான்கு புத்தகங்களில் ட்ரெட்னர் கோடெக்ஸ் என்பதில்தான் 2012 இல் உலக அழிவு பற்றி விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. அதன்படி பூமியானது நீரினாலும் நெருப்பினாலும் சூழப்பட்டு அழிவதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பூமியின் துருவங்கள் இடம்மாறுவதற்கும் பூமியில் தனித்தனியாக சுனாமிகளும் பூகம்பங்களும் ஏற்பட்டு உலகம்அழியும் என்பதற்கும் சாத்தியங்கள் தற்சமயம் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கிறது. சுனாமிகளும் பூகம்பங்களும் தனித்தனியே ஆங்காங்கே ஏற்பட்டாலும் அவை ஒட்டுமொத்த உலக அழிவை ஏற்படுத்திவிடாது. அதுவும் டிசெம்பர் 22 இற்குள் ஏற்படவே முடியாது. இதன் அடிப்படையில் கடைசியாக எம்மிடையே எஞ்சியிருப்பன இரண்டேயிரண்டு விடயங்கள் மட்டும்தான் அவை,

1.சூரியனின் வெப்பக்கதிர் வீச்சு

2.சூப்பர்வோல்கான் (பூமியினுள்ளே உள்ள எரிமலைகள்)

இந்த இரண்டினாலும் ஏற்படப்போகும் அழிவை எந்தவொரு விஞ்ஞானியும் மறுக்கவில்லை. இவையிரண்டிற்கும் 2012 டிசெம்பர் அழிவுக்கும் சம்பந்தம் இருக்கலாமா என்று கேட்டால், உலகிலுள்ள அனைத்து விஞ்ஞானிகளும் இல்லையென்று பதில் சொல்வதேயில்லை. இவற்றிற்கு சாத்தியங்கள் இருக்கலாம் என்று சந்தேகத்துடன் ஒருசாரார் சொல்ல, இருக்கிறது என்று ஒரு சாரார் அடித்துச் சொல்ல, எஞ்சியவர்கள் அமைதியாகத்தான் இருக்கிறார்களே ஒழிய



ஜெலோ ஸ்ரோனின் வெப்ப அளவில் வித்தியாசமான பகுதிகள்

இல்லையென்று மறுக்கவில்லை.

**சூப்பர் வோல்கான் (எரிமலைகள்)**


இவை,பூமியை அழிவை நோக்கி நகர்த்தக் கூடியவை என்றே கருத இடமுண்டு. இவை சாதாரணமாக நாம் சினிமாக்களிலும் வேறு வீடியோக்களிலும் பார்த்தது போன்ற எரிமலைகள் அல்ல.

இவையெல்லாமே மலைகள் போலல்லாமல், சாதாரணமாக நிலத்தின் கீழ் அடங்கியிருப்பவை. மொத்தமாக பூமியில் 8 சூப்பர் வோல்கான்கள் (பெரிய எரிமலைகள்) இருக்கின்றன. அவற்றில் முக்கியமாக பயங்கர விளைவுகளைத்தரக்கூடியது, அமெரிக்காவிலுள்ள ஜெலோ ஸ்ரோன் என்பதுதான்.

அமெரிக்காவின் உயோமிங் மாநிலத்தில் அமைந்திருக்கும் இந்த ஜெலோ ஸ்ரோன் 102 கி.மீற்றர் நீளம், 82 கி.மீற்றர் அகலம் கொண்ட பாரிய நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. இந்த எரிமலை 60 கி.மீற்றர் நீளத்திற்கும் 40கி.மீற்றர் அகலத்திற்கும் 10 கி.மீற்றர் பூமியின் கீழே ஆழத்திற்கும் எரிந்து கொண்டிருக்கும் மிகப்பெரிய கூட்டுபோல இது இருக்கிறது. உண்மையில் இது எரியும் கூண்டு அல்ல. ஆயிரமாயிரம் அணுகுண்டுகளின் வெடிப்பு சக்தியை உள்ளடக்கிய பாரிய வெடிகுண்டு போன்றது.

இந்த ஜெலோ ஸ்ரோன் பிரதேசங்களில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான வெந்நீர் ஊற்றுக்கள் நிலத்திலிருந்து சீறியபடி இருக்கின்றன. இவற்றைப் பார்ப்பதற்கென்றே சுற்றுலாப்பயணிகள் அங்கு குவிகின்றனர்.


கிட்டத்தட்ட மிகப்பெரிய ஒரு நகரமே பூமிக்குக் கீழே எரிந்தபடி இருக்கிறதுபோல இது உள்ளது. அது எப்போது வெடித்து வெளிவருமோ என்று தெரியாதநிலையில் அதனால் ஏற்படும் சுடுநீர் ஊற்றுக்களைப் பார்க்க மக்கள் அங்கே கூடுகிறார்கள். இந்த **ஜெலோ ஸ்ரோன்** மட்டும் வெடிக்குமானால், ஒட்டு மொத்த அமெரிக்காவே சிலநிமிடங்களில் காலியாகிவிடும். அது கடற்பகுதியில் ஏற்படுத்தும் தாக்கத்தால் உலகமெங்குமே சுனாமி, பூகம்ப அழிவு ஏற்படமுடியுமும். அதுமட்டுமல்லாமல், இந்த எரிமலை வெடிப்பதால் அதன் பாதிப்பின் தொடர்ச்சியாக உலகின் மற்றைய 7 மிகப்பெரிய எரிமலைகளும் வெடிக்கும் சாத்தியங்களும் உண்டு. இதனால், ஏற்படக் கூடியது, ஒட்டுமொத்த உலக அழிவுதான். இந்த எரிமலை வெடிப்புக்கு சாத்தியங்கள் இல்லை என்று யாரும் கருதவில்லை. இதன் சீற்றம் அதிகரிக்கின்றபோதெல்லாம் அதற்கான சாத்தியத்தைப் பற்றி உலகம் எப்போதும் பயப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது. இதனை மாயன்களின் எதிர்வுகூறலுடன் தொடர்படுத்தியே உலக அழிவு பற்றி இன்று பெரும் பரபரப்பு நிலவிவருகிறது. இருப்பினும் நாம் விஞ்ஞானத்தின் மூலமாக இயற்கையைப்பற்றி அறிந்திருப்பதைவிட இன்னும் அறியாமல் இருப்பவையே அதிகம். நாம் இதுவரை அறியமுடியாத பல அதிசயங்கள் இயற்கையில் இருந்துகொண்டேதான் இருக்கின்றன. எனவே எரிமலைகளால் அழிவு


சூரியனில் சாதாரணமாக வெடிப்பு நிகழும் சந்தர்ப்பம்- தீப்பிழம்பு,புகை வெளிப்படுதல்

என்பதை நாம் நம்பித்தான் ஆகவேண்டும் என்பதில்லை; இயற்கை மிகமிக மிக வினோதமானது. மனிதன் நினைப்பதெல்லாம் நடந்துவிடுவதில்லை.

**சூரியனின் வெப்பக்கதிர் தாக்கம்**

இந்த சூரியனின் வெப்பக்கதிர் தாக்குதலுக்குச் சாட்சியாக சமீபகாலங்களாக சூரியன் தனது வெப்பக் கதிர்வீச்சுகளை மிகவும் அதிகமாக்கியிருக்கிறது.



சூரியவெப்பக் கதிர்வீச்சால் பூமியில் ஏற்படும் மாற்றங்கள்

சூரியனின் இந்தக் கதிர்வீச்சுத்தாக்குதல் ஒரு புயல்போல பூமியைத் தாக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள். சூரியப்புயல் என்னும் நிகழ்வு சாதாரணமாக சூரியனில் நடந்துகொண்டிருப்பதுதான். சூரியனிற்குள் நடக்கும் வெடிப்புகளின் அளவைப் பொறுத்து சூரியப்புயலின் அளவு மாறுபட்டு வந்திருக்கிறது. சூரியனில் மிகப்பெரும் வெடிப்புகள், வெப்பக் காழ்புகள் நடைபெறும் பொழுது தான் சூரியப்புயலின் தாக்கம் அதிகமாகிறது. அப்படித்தாக்கும்போது அதனுடன் சேர்ந்து உருவாகும் மின்காந்த அலைகளின் தாக்குதல்கள் பூமியின் இரண்டு துருவங்களுக்கூடாக பூமியினுள் நுழைந்து, பூமியில் இருக்கும் அனைத்துவிதமான மின்னியல் சாதனங்களையும் தொழிற்பட முடியாமல் செய்துவிடும். அத்துடன் பூமி நினைக்க முடியாத அளவு வெப்பமாகிவிடும் என்றும் கருதப்படினும். இந்த அனர்த்தங்கள் எல்லாம் ஊகங்களே தவிர, நிச்சயமானவையல்ல. இப்படியான ஊகங்களை நிரூபிக்கும் வகையிலான எந்த விஞ்ஞான ஆதாரங்களும் அண்மைக் காலங்களில் விஞ்ஞானிகளால் எடுத்துக் காண்பிக்கப்படவில்லை. இது பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளும் அவசியம் இப்போதைக்கு இல்லை என்றே நம்பலாம். இந்தப்பிரபஞ்சத்தில், பூமி என்ற இந்த சிறிய பந்திற்கு என்றென்றும் இருக்கக் கூடிய பல ஆபத்துக்களைப் பற்றி இன்றைய மனித உலக அறிவியல் அதிகமாகவே கண்டறிந்து வருகிறது, இணையத்தளங்கள் மூலம் இச்செய்திகள் ஒவ்வொரு கிராமங்களின் மூலை முடுக்குகளிலும் சில நிமிடங்களில் பரவியும் விடுகிறது. இதனால், முன்பிலும் அதிக பரபரப்பு உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது என்பது நம் எல்லோருக்குமே புரிகிறதல்லாவா! இயற்கையாகவே பூமிக்கு இத்தகைய ஆபத்துக்கள் நிறைந்திருக்கையில், மனிதனும் அதற்கு ஆபத்தை விளைவிக்க வேண்டாமே. இயற்கையைப் பாதுகாக்கும் உணர்வோடும், செயற்கையைத் தவிர்த்து இயற்கையோடு இணைந்து வாழ்ந்தும், எமது பேராசைகளைத் தவிர்த்து, பெருங்கோபங்களையும் அதனால், ஏற்படும் பெரும் யுத்தங்களையும் தவிர்த்து அமைதியான, இனிமையான வாழ்வு வாழ்ந்தும், பூமியை இன்னும் கோடான கோடி யுகங்கள் காத்துக்கொள்வோம்; அணுகுண்டு யுகத்தை இல்லாதொழிப்போம்....!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2013 இல் 30 ஆயிரம் அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு வருவர்

## ஹெரால்ட் சன் செய்தி

அவுஸ்திரேலியாவிற்குள் அடுத்த வருடத்தில் சுமார் 30 ஆயிரம் பேர் வரை சட்டவிரோதமாக படகுகள் மூலம் செல்லக்கூடும். அதனை புகலிடக் கோரிக்கையாளர் தொடர்பான நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளதாக ஹெரால்ட் சன் செய்தி வெளியிட்டுள்ளது.

சட்டவிரோத புகலிடக்கோரிக்கையாளர்களை பராமரிக்க பல மில்லியன் டொலர்களை செலவிட அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்தல் விடுத்துள்ள நிலையிலேயே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

புகலிடக்கோரிக்கையாளர்களை பராமரிக்கவென்று மேலும் 375 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே 2.9 மில்லியன் டொலர்கள் கடந்த வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கொள்கை வகுப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில் கட்சியின் குழுவில் அங்கம் பெற்றுள்ள நிபுணரான பாரிஸ் எரிஸ்டோட்டல் என்பவர் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த வருடம் 30 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் வருவர் என்று குறிப்பிட்டுள்ளதாக ஹெரால்ட் சன் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஜனாதிபதி இராணுவத்தை குறைக்கவேமாட்டார்

## கோத்தபாய நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இராணுவத்தை குறைக்கவோ அல்லது கலைக்கவோ மாட்டார் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இராணுவத்தை குறைப்பது தொடர்பில் அண்மையில் வெளிநாடொன்று ஜனாதிபுதியிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதன்போது இராணுவத்தை குறைக்கவோ அல்லது கலைக்கவோ தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினரை ஆக்கபூர்வமான முறையில் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு காணப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வது முப்படையினரின் பிரதான கடமை என்றபோதிலும் முடிந்தளவு நாட்டின் அபிவிருத்திக்காக உதவிகளை வழங்கி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கும் பிணை

(கொழும்பு)

கொழும்பு இரவு காரோட்டப் பந்தயத்தின் போது நுழைவுச்சீட்டின்றி நுழைய முயற்சித்து கடமையிலிருந்த பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த அமைச்சு பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த இரு பொலிஸ் அதிகாரிகளையும் பிணையில் செல்ல கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்றைய தினம் அனுமதி வழங்கியது.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற மேற்படி காரோட்டப் பந்தயத்தின் போது இடையூறு விளைவித்த மேற்படி இரு பொலிஸ் அதிகாரிகளும் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரத்ன அனுமதி வழ்ங்கினார்.

மேற்படி இருவரும் நுழைவுச்சீட்டின்றி வந்ததை அடுத்து அவர்களை பந்தயம் இடம்பெறும் இடத்துக்குச் செல்ல பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். இதனால் கடமையிலிருந்த பொலிஸார் மீது இவ்விருவரும் கற்களை வீசி• தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சட்ட மருத்துவரின் மதுபோதை பரிசோதனைக்கு உட்படுத்தியதை அடுத்து அவர்கள் மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது. இந்நிலையிலேயே இவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.(அ-2)

# பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்

## கி.வீரமணி வலியுறுத்து



யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்ய இந்திய அரசு அதன் தூதுவர் மூலமோ அல்லது வெளியுறவுத்துறை மூலமோ உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஈழத் தமிழர் வாழ்வுரிமைக்காகவும் மனித உரிமை மீட்டெடுப்புக்காகவும் குரல் கொடுக்கும் அத்தனை கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்ய இந்திய அரசு அதன் தூதுவர் மூலமோ அல்லது வெளி உறவுத்துறை மூலமோ உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் நாம் வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இதுபோன்ற பிரச்சினைகளிலாவது இலங்கை அரசின் கொடுமைகளை, மீனவர்கள் கைது, சிறைச்சாலை சித்திரவதை, வலைகளில் உள்ள மீன்களைப் பறித்துச்செல்லும் அக்கிரமங்கள் இவற்றைப்பற்றிப் பேசி ஒரு நிரந்தரத் தீர்வை அவசியம் ஏற்படுத்தியாக வேண்டும்.

தமிழ்நாட்டு அரசியல் கட்சித் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினையில் அவசியம் தக்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசரம்! அவசரம்!! அவசரம்!!! என்றார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# மருந்திற்கு பயன்படும் மூலிகை இலைகள்

### ஆடாதோடை

ஆடாதோடை இலை, தூதுவளை சம அளவாக எடுத்து சிறுக அரிந்து (தூதுவளை இலையின் ஓடு நரம்பிலுள்ள முட்களை அகற்ற வேண்டும்) 8 மடங்கு நீர்விட்டு 1/8 ஆக வற்றக்காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க ஆஸ்துமா, இருமல் தணியும்.

ஆடாதோடை இலை, திப்பிலி சம அளவாக எடுத்து 15 நாட்கள் நிழலில் உலர்த்தி ஒரு நாள் வெயிலில் வைத்து பொடித்து அரித்து 4 கிராம் அளவு காலை, மாலை தேனில் கலந்து சாப்பிட சளித்தொல்லை, இருமல் தணியும்.

### தூதுவளை

தூதுவளை இலையை சமையலுடன் கீரைபோல சம்பல், துவையல், பொரியல், கூட்டு செய்தும் பயன்படுத்தலாம்.




தூதுவளை - 50 கிராம்
பனங்கற்கண்டு- 50 கிராம்
சிறிய வெங்காயம்- 50 கிராம்
பசுநெய்- 25 கிராம்

தூதுவளையை சிறிதாக அரிந்து கொள்ளவும். சிறிய வெங்காயத்தை பொடியாக அரிந்து பனங்கற்கண்டை சுத்தம் செய்து சட்டியிலிட்டு சரக்குகளை வேக வைத்து பனங்கற்கண்டை போட்டு கிளறி வேகிய பதம் வரும் போது பசுநெய் விட்டுக்கிளறி ஆறிய பின் எடுத்து வைத்துக் கொள்ளவும். இருவேளை உணவிற்கு பின் 5 கிராம் அளவு 3 நாட்கள் சாப்பிட்டுவர சகலவிதமான இருமல், ஆஸ்துமா, சளி, கபக்கட்டு, கசம் நீக்கி குணமாகும்.

### துளசி இலை

துளசியில் பல இனங்கள் உண்டு. கருந்துளசி இலைகள் 5 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் 15 நிமிடங்கள் ஊறவிட்டு குடிக்க தொண்டைக்கட்டு நீங்கும்.

துளசியும் மிளகும் சமஅளவு எடுத்து மென்று தின்ன விஷக்கடியின் குணங்கள் அகலும். கருந்துளசி சாறு 1 மேசைக்கரண்டி, தேன் 1 மேசைக்கரண்டி சேர்த்து குடித்துவர மூக்கடைப்பு, தலைப்பாரம், கபம், கட்டிய இரு மல் நீங்கும்.

### முடிதும்பை

முடிதும்பை இலைகளை சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் காலை, மாலை சாப்பாட்டின் பின் உட்கொள்ள தும்மல், தலைப்பாரம், நீர்க்கோர்வை, மூக்கடைப்பு, பெண்களின் மாதவிடாய் சிக்கல் நீங்கும்.

### அறுகம்புல் இலை

அருகம்புல்- 50 கிராம்
வேப்பிலை- 50 கிராம்
துளசி- 50 கிராம்
மஞ்சள்- 50 கிராம்

இலைகளை பொடித்து அரித்து ஒன்று சேர்த்து பொடியை புட்டியில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். 2 தேக்கரண்டி பொடியை மோருடன் கலந்து அரிப்பு, சொறி, படை, பற்று உள்ள இடங்களில் தேய்த்து வைத்து ஒரு மணி நேரம் சென்ற பின் கழுவிவர சில நாட்களில் குணம் தெரியும்.

### ஓரிதழ் தாமரை

ஓரிதழ் தாமரை இலைகளை நிழலில் உலர்த்தி பின் வெயிலில் ஒரு நாள் வைத்து எடுத்து பொடித்து அரித்து 2 கிராம் தேன் அல்லது பசும்பாலில் உட்கொள்ள இரத்த விருத்தியும் உடல் வலுவும்.

### சிறுகுறிஞ்சா

இதன் இலைகளை சேகரித்து உப்புத் தண்ணீரிலும் பின்பு நல்ல தண்ணீரிலும் கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு காலை, மாலை சாப்பிட நீரிழிவு நோயையும் விஷக்கடிகளையும் நீக்கும்.

### முசுமுசுக்கை இலை

முசுமுசுக்கை இலையை 15 நாட்கள் நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 4 கிராம் ஒரு தேக்கரண்டி தேனில் 40 நாட்கள் உட்கொள்ள சளி, இருமல், நீர்க்கோவை, மூக்கிலிருந்து நீர் படிதல் போன்றன நீங்கும்.




### அத்தியிலை

அத்தியிலை உடலுக்கு நல்ல இரத்த விருத்தியையும் கொடுத்து நோய் எதிர்ப்பு சக்தியையும் தர வல்லது. இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து 4கிராம் அளவு 20 நாட்கள் உட்கொண்டு வர மேற்கூறிய பயன் கிடைக்கும். நீரிழிவு நோயாளிகளும் மேற்படி பொடியை பயன்படுத்தலாம்.

### ஆவாரை இலை

ஆவாரை இலை, ஆவாரம்பூ இரண்டையும் சம அளவு எடுத்து 15 நாட்கள் நிழலில் உலர்த்தி ஒரு நாள் வெயிலில் உலர்த்தி பொடித்து அரித்த பொடியை உடலில் தேய்த்து முழுகி வர உடல் பொன்னிறமாகவும் பளபளப்பாகவும் அழகாக வரும். இதன் உலர்ந்த இலைகள் 2 கிராமிற்கு 100 மில்லி நீர் விட்டு தேநீர் மாதிரி தயாரித்து குடித்து வர நீரிழிவு கட்டுப்படும்.

### மஞ்சள் கரிசலாங்கண்ணி

மஞ்சள் கரிசலாங்கண்ணி இலைகளை 35 கிராமை 200 மில்லி தேங்காய் எண்ணெயில் வேக வைத்து வடி கட்டி ஆறிய பின் முடிக்கு தேய்த்துவர முடி நன்கு வளரும். கறுப்பாக இருக்கும்.

இதன் இலைகளை அரைத்து பதமாக்கி தேள்கடிக்கு கடித்த இடத்தில் நன்றாகத் தேய்த்து அதையே அவ்விடத்தில் வைத்துக் கட்டினால் நஞ்சு நீங்கும். இலையை வேக வைப்பதால் உண்டாகும் ஆவியை மூல நோய்களுக்கு பிடிக்கத் தீரும்.

### கோழியவரை இலை

இதன் இலைகளை 15 நாட்கள் நிழலில் உல ர்த்தி பொடித்து ஒருநாள் இருவேளை 2 கிராம் அளவு வெந்நீரில் 40 நாட்கள் உட்கொண்டு வர தோல் வியாதிகள், பித்த வாந்தி நீங்கும்.

### பாகல்

இலைச்சாற்றை முகப்பருக்கள் மீது தொடர்ந்து பூசிவர முகப்பருக்கள் அகலும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற கட்டமைப்பு அரசியல் மயப்படக்கூடாது

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற முறைமைக்கு சவால் விடுக்க முடியாது என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்க அச்சகப் பேரவையின் 56 ஆம் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நிறைவேற்று அதிகாரமோ அல்லது நீதிமன்றக் கட்டமைப்போ பாராளுமன்றத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்கவோ அல்லது சவால் விடுக்கவோ முடியாது. ஜனநாயகத்தின் உச்ச பொறிமுறைமையாக பாராளுமன்றத்தை கருத முடியும்.

நாட்டின் நீதியை நிலைநாட்டுவதே நீதிமன்றக் கட்டமைப்பின் முதன்மைக் கடமை எனவும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களில் நீதிம்ன்றம் தலையீடு செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றக் கட்டமைப்பு அரசியல் மயப்படுத்தப்பட்டால் அது பாதகமான நிலைமையை ஏற்படுத்த வழிகோலும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான பாதீடு பிரதேச சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக பொது மக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை வைக்கப்பட்டுள்ளது என பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் அறிவித்துள்ளார். (அ-9)

# றிசாத் மீதான வழக்கிற்கு சட்டத்தரணிகள் வரவில்லை

(மன்னார்)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மன்னாரில் இடம்பெற்ற போது சட்டத்தரணிகள் சங்கத்தின் எந்தப் பிரதிநிதியும் அங்கு பிரசன்னமாகவில்லை.

அத்துடன் நீதவானும் மனுதாரருமான ஜுட்சனும் அன்றைய தினம் சமுகம் அளிக்கவில்லை. எனினும் பிரதிவாதியான அமைச்சர் றிசாத் நீதிமன்றத்துக்கு சமுகம் தந்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு ஒன்று தொடர்பில் அமைச்சர் தமக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்தார் என்று மன்னார் நீதிவான் ஜுட்சன் சுமத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ-2)

# எம்.பிக்களின் சொத்து விபரம் வெளியிடப்படும்

## கபே அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கபே எனும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கள் தொடர்பான விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவ் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களை அறிந்து கொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இராணுவ பயிற்சி பெறும் யுவதிகளை பார்வையிட அனுமதிக்க வேண்டும்

## பழ.நெடுமாறன் கோரிக்கை

இலங்கை இராணுவத்தில் தமிழ் பெண்கள் கட்டாயமாக இணைத்துக் கொள்ளப்படுவதை எதிர்த்து சர்வதேச சமுதாயம் குரல் கொடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கை இராணுவத்தில் முதல் முறையாக தமிழ் பெண்களை இணைக்கும் திட்டத்தை இலங்கை அரசு செயற்படுத்தி வருகிறது. மாதம் 30 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வேலைக்கு விண்ணப்பித்த பெண்களை இராணுவப் பயிற்சிக்கு அனுப்பியுள்ளனர்.

பயிற்சி முகாம்களில் உள்ள அவர்களைச் சந்திக்க பெற்றோர், குடும்பத்தினருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தமிழ்ப் பெண்களுக்கு அளிக்கப்படும் இந்தப் பயிற்சி குறித்து சந்தேகம் தெரிவித்துள்ளார்.

பயிற்சியில் சேர்க்கப்பட்ட 103 பெண்களும் அங்கிருந்து வெளியேற விரும்புவதாகவும் ஆனால், அவர்களைக் கட்டாயப்படுத்தி பயிற்சி பெற வைப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் மற்றும் பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள இலங்கை இராணுவம் தமிழ்ப் பெண்களைக் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்ப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

இதனை சர்வதேச சமுதாயம் கண்டிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

# கடும் மழை காரணமாக வான் கதவுகள் திறப்பு

(கொழும்பு)

நாட்டின்பலபாகங்களிலும்பெய்து வரும் கடும் மழை காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் ஆறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் கலாஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக புத்தளம் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதனால் கலாஓயாவை அண்மித்து வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இங்கினியாகல நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் மீஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

மேலும் உடவளவ நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ-2)




★1154-இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி முடிசூடினான்.

★1606-ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்ற நாடுகளில் முதலாவதான வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரில் இங்கிலாந்தில் இருந்து மூன்று கப்பல்களில் ஆங்கிலேயர்கள் வந்திறங்கினர்.

★1871-யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுரு பதவிகள் (Ordination) வழங்கப்பட்டன.

★1877-யாழ்ப்பாணம், நெடுந்தீவில் வாந்திபேதி மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் உயிரிழந்தனர்.

★1916-முதலாம் உலகப் போர்: பிரான்சில் வேர்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஜேர்மனியப் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன.

★1941-அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனிய இராணுவத் தலைவர் ஆனார்.

★1961-போர்த்துக்கீச குடியேற்ற நாடான டாமன் டையூ பகுதியை இந்தியா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

★1963-சன்சிபார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று சுல்தான் ஹமூட் பின் முகமது தலைமையில் முடியாட்சியைப் பெற்றது.

★1967-இரு நாட்களின் முன்னர் கடலில் நீந்தும் போது காணாமல் போன அவுஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் இறந்து விட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

★1972-சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.

★1983-உலகக் கோப்பை காற்பந்துப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக் கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு காற்பந்தாட்ட அமைப்பின் தலைமையகத்தில் வைத்துத் திருடப்பட்டது.

★1984-ஹொங்கொங்கின் ஆட்சியை ஜூலை முதலாம் திகதி 1997 இல் மக்கள் சீனக் குடியரசிடம் மீண்டும் ஒப்படைக்கும் ஒப்பந்தம் சீனத் தலைவர் டெங் க்ஸியாவோபிங், பிரித்தானியப் பிரதமர் மார்க ரெட் தாட்சர் ஆகியோருக்கிடை யில் கைச்சாத்திடப்பட்டது.

★1986-சோவியத் எதிர்ப்பாளி அந்திரேய் சாகரொவ் வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

★1997-டைட்டானிக் திரைப்படம் வெளியானது.

★2000-யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 3 வயதுக் குழந்தை உட்பட 8 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

★1901-ருடால்ப் ஹெல், ஜேர்மனிய கண்டுபிடிப்பாளர் (இ.2002)

★1906-லியோனிட் பிரெஷ்னேவ், சோவியத் ஒன்றியத் தலைவர்(இ.1982)

★1922-கே. அன்பழகன், தமிழக அரசியல்வாதி

★**1934-பிரதிபா பட்டேல், இந்தியாவின் 12 ஆவது குடியரசுத் தலைவர்**

★1974-ரிக்கி பொன்ரிங், அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்



பிரதீபா பட்டேல் (இந்தியக் குடியரசுத் தலைவர்)

பிரதீபா பட்டேல் இந்தியாவின் முதலாவது பெண் குடியரசுத் தலைவர் ஆவார். அத்துடன் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது குடியரசுத் தலைவரும் ஆவார். இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரான இவர் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் ஆவார். 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 ஆம் திகதி நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு இவருக்கு எதிராகப் போட்டியிட்ட பைரன் சிங்க் ஷெகாவத் அவர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்.

மராட்டிய மாநிலத்தில் உள்ள ஜல்கான் மாவட்டத்தில் பிரதீபா பட்டேல் பிறந்தார். அவரின் தந்தை பெயர் ஸ்ரீ நாராயண ராவ். ஜல்கானில் உள்ள எம்.ஜே. கல்லூரியில் முதுகலைமாணி (எம்.ஏ.) பட்டம் பெற்றார். பின்னர் அவர் மும்பையில் உள்ள அரசு சட்ட கல்லூரியில் எல்.எல்.பி. பட்டம் பெற்று சட்டத்தரணியாகவும் பயிற்சி பெற்றார்.

மகாராஷ்டிரா மாநில அவையில் உறுப்பினராக 1962 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 வரை இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினராகவும் 1991 தொடக்கம் 1996 வரையில் இருந்தவர். 2004 ஆம் ஆண்டு முதல் ராஜஸ்தான் மாநில ஆளுநராகப் பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய, அமெரிக்க அரசுகள் அதிர்ச்சியில் சீனாவின் நகர்வுகளில் சந்தேகம்.....!

கடந்த வாரம் காலி கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கருத்துதெரிவித்தரிந்தார். இந்து சமுத்திரத்தில் சீனாவின் தலையீட்டை முற்றிலும் நியாயப் படுத்தும் வகையில் அவரது உரை அமைந்திருந்தது. இது இராஜதந்திர மட்டங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்து சமுத்திரத்தில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்த பின்னர்தான், இங்கு பதற்றம் தீவிரமடையத் தொடங்கியது. ஆனால், அதை இலங்கையின் பாதுகாப்புச் செயலகம் சீனாவின் எண்ணெய் விநியோகப் பாதையின் பாதுகாப்புக்கான நகர்வாக நியாயப்படுத்தியுள்ளதுதான் உச்சக்கட்ட நகைச்சுவை. இந்து சமுத்திரத்தைக் குறிவைத்து அதுவும் இந்தியாவைக் குறிவைத்து சீனா விரித்துவரும் முத்துமாலை வியூகத்தை- சினாவின் கடல்கடந்த முதலீடுகளாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் 2009 இல் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை இராணுவம் ஆண்டுதோறும் பாதுகாப்புக் கருத்தரங்கை நடத்தி வருகிறது. பல்வேறு சிக்கல்கள், சர்ச்சைகள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில் தான் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புக் கருத்தரங்கு இடம்பெற்று வருகிறது. போர்க்குற்றம் புரிந்த இராணுவத்தின் கருத்தரங்கில் பங்கேற்கக் கூடாது என்று மனித உரிமை அமைப்புகள் குரல் எழுப்புவது வழக்கம். இலங்கை இராணுவத்தைப் போலவே இலங்கை கடற்படையும் கடற்பாதுகாப்புக் கருத்தரங்கை நடத்தி வருகிறது.

காலி கலந்துரையாடல் என்ற பெயரில் 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கருத்தரங்கு இம்முறை மூன்றாவது ஆண்டாக நடத்தப்பட்டுள்ளது. ஆனால், இராணுவம் எதிர்கொள்வதைப்போன்று சர்ச்சைகள், சிக்கல்களை இலங்கை கடற்படை எதிர்கொள்வதில்லை. அதற்கு முக்கிய காரணம், இலங்கையின் புவிசார் அமைவிடம்தான். இந்துசமுத்திரத்தில் யாராலும் தவிர்க்க இயலாத ஒரு புள்ளியில் இலங்கை அமைந்துள்ளதால் இலங்கைக் கடற்படையின் இந்தக் கருத்தரங்கை பிறநாடுகள் அதிகம் விமர்சிப்பதில்லை. மனித உரிமைமீறல் விவகாரங்களில் இலங்கையுடன் கடுமையாக மோதிக்கொள்ளும் நாடுகள்கூட இலங்கை கடற்படையை வலுப்படுத்தவும் அதனுடன் இணைந்து செயற்படவும் தயாராகவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி தனியான அமைப்பாக செயற்படுமானால் கடலோரக் காவல்படைக்கு பெருமளவு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் என்று அண்மையில் இலங்கைக் கடலோரக் காவல் படையின் அதிகாரி ஒருவர் கூறியிருந்தார். தற்போது இலங்கைக் கடற்படையின் ஒரு குழந்தையாகவே பார்க்கப்படும் கடலோரக் காவல் படையை வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்காக தனியான அமைப்பாக உருவாக்குவதற்கும் அரசாங்கம் திட்டமிடக்கூடும். அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகள் இலங்கையின் கடலோரக் காவல்படைக்கு படகுகள் போன்ற உதவிகளை வழங்கத் தயாராக உள்ளன. ஒருபக்கத்தில் இலங்கை இராணுவம் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வலியுறுத்தினாலும் இந்த நாடுகள் கடற்படை சார்ந்த விடயங்களில் இலங்கையுடன் ஒத்துழைக்கவே விரும்புகின்றன. இதனால் தான், கடற்படையால் காலி கருத்தரங்கை சர்ச்சைகளின்றி வெற்றிகரமாக நடத்த முடிகிறது.


அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் பங்கேற்ற இந்தக் கருத்தரங்கில் சீனாவுக்காக பரிந்து பேசிவிட்டு சீனாவுடன் இலங்கை அணி சேரவில்லை என்றும் தொடர்ந்தும் அணி சேராக் கொள்கையையே இலங்கை கடைப்பிடிப்பதாகவும் பாதுகாப்புச்செயலர் கூறியிருப்பது தான் வேடிக்கை.

இந்துசமுத்திரப்பிராந்தியத்தில் சீனதலையீட்டிற்கான அடிப்படைக் காரணங்களை இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் விரிவாக விளக்கியிருந்தார்.

இந்துசமுத்திரத்தில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்த பின்னர்தான் இங்கு பதற்றம் தீவிரமடையத் தொடங்கியது. ஆனால், அதை பாதுகாப்புச் செயலர் சீனாவின் எண்ணெய் விநியோகப்பாதையின் பாதுகாப்பிற்கான நகர்வாக நியாயப்படுத்தியுள்ளார். ஆனால், இந்து சமுத்திரத்தில் சீனா தனது படை வலிமையையும் பொருளாதார வலுவையும் ஒன்றுகுவித்துவருவதற்குக் காரணம் தனியே மத்திய கிழக்கிலிருந்து எண்ணெய் விநியோகத்தை உறுதி செய்து கொள்வதற்காக மட்டுமல்ல. சீனாவின் படைவலிமையை உறுதி செய்து கொள்வதற்கும் தனது முதன்மை எதிரியான இந்தியாவை சுற்றி வளைப்பதற்கும்தான் சீனா இவ்வாறு செயற்படுகிறது என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. அதைவிட இந்துசமுத்திரத்தில் வலுவாகக் காலூன்றியுள்ள அமெரிக்க கடற்படைக்கும் சவால்விடுவதுதான் சீனாவின் நோக்கம். அதனால்தான் சீனா தன்னிடமுள்ள-அண்மையில் கட்டிமுடிக்கப்பட்ட ஒரே விமானந்தாங்கி போர்க்கப்பலைக்கூட இந்துசமுத்திரத்தில் நிறுத்தத் திட்டமிட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலர் குறிப்பிட்டுள்ளது போன்று சீனாவின் எண்ணெய்த் தேவை அதிகரித்து வருவது உண்மையே.

1985 ஆம் ஆண்டில் 20 மில்லியன் தொன் பரல் எண்ணெயை ஏற்றுமதி செய்யும் நிலையில் இருந்தது சீனா. ஆனால், 2010 ஆம் ஆண்டு தனது எண்ணெய்த் தேவையான 455 மில்லியன் தொன்னில் 200 மில்லியன் தொன்னை இறக்குமதி செய்யும் நிலையில் இருந்தது. அதிகரித்த சனத்தொகை மற்றும் கைத்தொழில் வளர்ச்சி என்பவற்றினால், 1993 ஆம் ஆண்டின் பின்னர், சீனாவின் உள்நாட்டு எண்ணெய் உற்பத்தி, தேவையை விட குறைந்துபோனது. இதன் பின்னர் சீனா, பிறநாடுகளை நம்பவேண்டிய நிலைக்குள்ளானது. ஆனால், மத்திய கிழக்கிலிருந்து சீனா முழுமையான எண்ணெய் இறக்குமதியை மேற்கொள்ளவில்லை. மத்தியகிழக்கின் எண்ணெயை முழுமையாக- நிரந்தரமானதாக நம்பவும் இல்லை. மத்திய கிழக்கிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு சீனாவின் கடற்பாதை இந்து சமுத்திரம் வழியாகவே உள்ளதால்,செலவு அதிகம் ஏற்படுகிறது. மத்தியகிழக்கு நெருக்கடிகளாலும் சீனாவிற்கு தலைவலி அதிகம். இதனால் சீனாவின் எண்ணெய் இறக்குமதியில் அரைப்பங்கையே மத்தியகிழக்கு ஈடுசெய்தது.



எண்ணெய் தேவைக்காக சீனா, தற்போது மாற்று வழிகளை நாடத் தொடங்கியுள்ளது. ரஷ்யாவிலிருந்தும் பிறமத்திய ஆசிய நாடுகளிலிருந்தும் போதிய அளவு எண்ணெயை இறக்குமதி செய்யக்கூடிய நிலை உள்ளதால், குழாய் வழியாக அவற்றைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறது. அதைவிட தென்சீனக்கடல், வியட்நாம், மியன்மார், இந்தோனேசியா போன்ற நாடுகளிடமிருந்தும் இந்தநாடுகளின் எண்ணெய் வயல்களிலிருந்தும் தனது எண்ணெய் தேவையை நிறைவு செய்யவே சீனா முனைகிறது. அத்துடன் மத்திய கிழக்கிலிருந்து தரைவழியாக எண்ணெய் இறக்குமதி செய்யும் திட்டமும் சீனாவிற்கு உள்ளது. ஆப்கானிஸ்தானுடன் உள்ள ஒடுங்கலான எல்லையும் ஆப்கானுடன் ஈரான் கொண்டுள்ள நெடிய எல்லையும் இதற்கு வசதியானது. இதனை மனதில் வைத்துத்தான் அமெரிக்கா வெளியேற முன்னதாகவே, ஆப்கானிஸ்தானின் உள்ளக அபிவிருத்திக்காக நிதியுதவிகளைக் கொட்டத் தொடங்கியுள்ளது சீனா. இந்த நிலையில் மத்திய கிழக்கின் எண்ணெய் விநியோகப் பாதையை தக்கவைத்துக் கொள்வதற்காக இந்துசமுத்திரத்தில் சீனா காலூன்றுவதான தோற்றப்பாட்டை பாதுகாப்புச் செயலர் ஏற்படுத்த முயன்றுள்ளார். அதுவும் சர்வதேச கருத்தரங்கொன்றில் இவ்வாறு கூறியுள்ளது வியப்பானது. அமெரிக்க இந்திய கடற்படைகளின் மூத்த தளபதிகள் மத்தியிலேயே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சீனாவின் படை மற்றும் பொருளாதாரத் தலையீட்டை இந்தியாவும் அமெரிக்காவும் சந்தேகத்துடன் பார்ப்பதாக கூறியுள்ளதை இந்த நாடுகள் நிச்சயம் இரசிக்கப்போவதில்லை. இந்து சமுத்திரத்தை குறிவைத்து அதுவும் இந்தியாவைக் குறிவைத்து சீனா விரித்து வரும் முத்துமாலை வியூகத்தை - சீனாவின கடல்கடந்த முதலீடுகளாக, காலி கருத்தரங்கில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்துசமுத்திரத்தில் சீனாவின் நிதியுடன் துறைமுகங்கள் ஏற்படுத்தப்படுவதை இந்தியா, விரும்பவில்லை என்றும் அது தனக்கு எதிராக விரிக்கப்படும் வலையென்று கருதுவதாகவும் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவின் இந்தக் கவலை உண்மையானதே. ஏனென்றால், பாகிஸ்தானில் குவாடர், மாலைதீவில் மாராவோ, இலங்கையில் அம்பாந்தோட்டை, பங்களாதேசில் சிட்டகொங், மியன்மாரில் சிட்வே அகிய துறைமுகங்களைக் கட்டி அல்லது நவீன மயப்படுத்தி அதனூடாக தனது நலன்களை கட்டியெழுப்பும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது. தன்னைச் சுற்றி ஒரு வலை பின்னப்படுவதை எந்த நாடுமே விரும்பாது. அச்சத்துடன்தான் பார்க்கும். இந்தியாவும் அதே கண்ணோட்டத்துடன்தான் பார்க்கிறது.

இந்துசமுத்திரத்தில் சீனாவின் இராணுவ, பொருளாதார தலையீட்டை நியாயப்படுத்த முயன்றுள்ளதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. உலகின் மூன்று வல்லரசுகளுக்கு மத்தியில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நடந்துவரும் பனிப் போருக்குள் தாம் அகப்பட்டு நசிபடுவதை இலங்கை விரும்பவில்லை. இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு மத்தியில் ஓடியோடி இலங்கை களைத்துப் போய்விட்டது போலுள்ளது.

2. இலங்கை அணிசேராமல் உள்ளது, அப்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் முத்துமாலை வியூகத்தில் இல்லை என்று நியாயப் படுத்துவது.

ஆனால், இந்து சமுத்திரத்தில் சீனாவின் தலையீட்டை எண்ணெய்ப் பாதைக்கான பாதுகாப்புக்கு என்று நியாயப்படுத்திக்கொண்டே, அம்பாந்தோட்டைத் துறைமுகம் மட்டும் அதில் இருந்து விதிவிலக்கானது

சுபத்ரா

என்று அவர் கூறப்பட்டுள்ளது. அதைவிட, இந்தியா, சீனா போன்ற முக்கியமான நாடுகளின் தளபதிகள் மத்தியிலேயே சீனத் தலையீட்டை முற்றிலும் நியாயப்படுத்திக்கொண்டே இலங்கை அணி சேராமல் நிற்கிறது என்றும் கூறியுள்ளது ஆகியவை மிகப்பெரிய முரண்களைக் கொண்டிருப்பது புலப்படகூடியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட்டில் எப்படி சக்திகள் செயற்படுகின்றன?

எகிப்து தேச பெரிய பிரமிட்டின் ஆற்றல்கள் அளவு கடந்தவை என்று பிரமிட் பற்றி ஆராய்ந்துவரும் தாந்திரீக ஆராய்ச்சியாளர்களும் விஞ்ஞானிகளும் கூறுகிறார்கள். இதன் உண்மை என்ன என்பதைத் தெரிந்து கொண்டால்தான் பிரமிட் சக்திகளின் மேல் நமக்கு ஒரு திட நம்பிக்கை ஏற்படும்.

ஒருகுறிப்பிட்ட அளவுடன் முக்கோணம் வரைந்து அதன்கூர்ப்பகுதி மேல் நோக்கி இருப்பது ஆண்சக்தி என்பதும் முக்கோணத்தின் கூரான பகுதி கீழ்நோக்கி இருப்பது பெண் சக்தி என்றும் சொல்லப்படுகிறது. இதை சிவம் சக்தி என்று நமது ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.


பிரமிட்டுக்கள் கட்டப்படுவதற்கு முன்பே நமது நாட்டில் பிரமிட்டு வடிவில் பலவிதமான யந்திரங்களை நமது ஞானிகளும் ரிஷிகளும் சித்தர்களும் உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள். இத்தலகய யந்திரங்களில் தலைசிறந்தது ஸ்ரீசக்கரம் என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திருமூலர் அண்டத்தின் அதிர்வுகளையும் எலெக்ட்ரோன், புரோட்டோன், நியூட்ரோன் என்பதை கார்ரண அணு, காரிய அணு, கார்ரண காரிய அணு என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆசிரியரின் பஞ்சாட்சர இரகசியங்களும் மா்ம எண்களும் என்ற நர்மதா வெளியீடான புத்தகத்தைப் பார்த்தால் இது புரியும்.

ஆகவே பிரபஞ்ச சக்திகளை திருவம்பலச் சக்கரம் என்றும் நடராஜர் என்றும் ஸ்ரீசக்கரம் என்றும் அழைக்கிறார்கள். பிரபஞ்சத்தின் அணுக்களின் அசைவை, அதிர்வுகளை நடராஜப்பெருமானாகச் சித்திரித்துள்ளார்கள். நாற்பது முக்கோணச் சக்கரத்தில் பிரபஞ்ச சக்திகள் அசைந்தாடி அதிர்வுகளை ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறது என்பதுதான் சிவபெருமானின் அதாவது பிரபஞ்ச நாயகனின் திருநடனத் தோற்றமான நடராஜர் ஆகும்.

நாற்பது முக்கோணச்சக்கரத்தில் பிரபஞ்ச நாயகனும் நாயகியும் சேர்ந்து பிரபஞ்ச விளையாட்டை விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அணுவே அண்டமாகி, அண்டமே அணுவாகி அண்டத்தில் பிண்டமாகிய உயிரினம் தோன்றி மறைவது சதா என்றுமே நடந்து கொண்டிருக்கிறது. பொதுவாக பிரபஞ்சத்தை ஆராய முடியாது. முடியுமானால் அது கோடானுகோடி அண்டங்களைக் கொண்டதாகும்.

ஒரு அண்டத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமானால் அது பத்தாயிரம் கோடி சூரியர்களைக் கொண்டது. அறிவுக்கு அப்பாற்பட்டவைகளை ஒதுக்கக் கூடாது. இந்த உலகத்தில் மனிதப் பிறவி எடுத்து நாம் வாழ்ந்து கொண்டிருப்பதுதான் மிகப் பெரிய அதிசயமாகும். மனிதன்தனது ஆறாவது அறிவைப் பயன்படுத்தி கலை, பொறியியல், விஞ்ஞானம், மருத்துவம், விண்வெளி ஞானம் என்று பிரித்துப்பார்க்கிறான்.



தனது பகுத்தறிவினால் விஞ்ஞானத் துறையில் ஆராய்ந்து அவைகளில் ஒவ்வொன்றிலும் பல உட்பிரிவுகளை ஏற்படுத்தி வசதிக்காக அறிவை வளர்த்துக்கொள்கிறான். இது போலத்தான் நமது ஞானிகள் தங்களது ஆறாவது அறிவைப் பயன்படுத்தியது மட்டுமல்லாது நம்மிடமுள்ள மறைந்து கிடக்கும் ஏழாவது அறிவாகிய தொகுப்பறிவைக்கொண்டு இயற்கையாகிய நாயகனின் இரகசியங்களை சூக்கும வடிவில் யந்திர, மந்திர ரூபங்களில் உள்ள இரகசியங்களை அறிந்துகொண்டு அவைகளை புராணங்களிலும் இதிகாசங்களிலும் வேதங்களிலும் ஆகமங்களிலும் மறைபொருளாக எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இத்தகைய ஞானிகளால் தெரிந்துகொண்டது தான் ஸ்ரீசக்கரம் எனப்படும் ஸ்ரீ யந்திரம் ஆகும். அதன் விரிவாக்கம்தான் மேரு என்று அழைக்கப்படுகிறது. மேரு சக்கரம் என்பது ஸ்ரீசக்கரத்தின் உண்மையான ரூபமா கும் என்று ஆதிசங்கரர் சௌந்தர்ய லஹரி யில் குறிப்பிடுகிறார். நாற்பது முக்கோணத் தின் சக்தி அண்டவெளி நாயகனின் மகாசக்தியாகும்.

இப்படியாக எகிப்தில் பிரமிட்டை அமைத்தவர்கள் அண்டவெளி இரகசியங்களையும் முக்கோணங்களின் இரகசியங்களையும் ஸ்ரீமேரு பிரஸாதர, ஸ்ரீசக்கர இரகசியங்களையும் தெரிந்தவர்களாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஆகவே அண்டவெளியில் உள்ள காஸ்மிக் கதிர்களின் சக்தியை மனிதன் தனது ஏழாவது அறிவால் உணர்ந்து உண்டாக்கிய சக்திகள் தான் ஸ்ரீசக்கரமும் முக்கோணங்களும் ஸ்ரீமேரு சக்கரயந்திரமும் எகிப்து நாட்டு பிரமிட்டுக்களும் ஆகும்.

ஆகவே ஏதோ மேல் நாட்டுக்காரர்கள் எகிப்து பிரமிட்டை ஆராய்ந்து அதில் அதிசயக் சக்திகள் இருக்கின்றன என்று கண்டுபிடித்து அதைப்பற்றி ஆச்சரியப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அற்புதமான ஆற்றல்களை நமது பாரத நாட்டு ஞானிகள், ரிஷிகள், யோகிகள், சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் எல்லோரும் அறிந்து கொண்டுதான் இருந்திருக்கிறார்கள்.

இத்தகைய சக்திகளைப் பயன்படுத்தி மனித இனம் மேம்பாடு அடைந்து உலகில் வாழும் வரை கஷ்டமில்லாது வாழவேண்டி பலவிதமான யந்திர, மந்திர, தந்திர சக்திகளை புராணங்களாகவும் உபநிஷத்துக்களாகவும் ஆகமங்களாகவும் வேதங்களாகவும் திருமுறைகளாகவும் இயற்றி நமக்கு வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆகவே ஸ்ரீ சக்கரம், மேரு சக்கரம் ஆகியவைகளை விட சுலபமாக அதன் ஆற்றல்களை பிரமிட்டுக்களின்மூலம் அடையலாம் என்று தெரியவந்துள்ளது. ஆகவே பிரமிட்டின் சக்தி பற்றி யாரும் சந்தேகப்படவேண்டிய அவசியமில்லை. ஒரு சக்தியை உருவாக்க பொறி இயல், புவி இயல், கணித இயல், வேதியியல், வான்வெளி இரகசியங்களையும் அறிந்துகொண்டுதான் விஞ்ஞானிகள் செயற்கைக்கோள்களையும் அணுகுண்டுகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் நமது ஞானிகள் புராணங்களில் அக்னியாஸ்திரம் அணுகுண்டுக்குச் சமமாகவும் ராமபாணம் ததீசி முனிவரின் வச்சிராயுதம் ஆகியவைகளை விஞ்ஞான யுகத்துக்கு முன்பே பயன்படுத்தியிருப்பதை நமது புராணங்கள் வாயிலாக நாம் தெரிந்து கொள்ளமுடிகிறது. ஆகவே சாதாரணமாக அட்டையில் செய்த சிறு பிரமிட்டில்கூட மகாசக்திகள் இருப்பதை இப்போது நன்கு பரவலாகத் தெரிந்து உபயோகித்து வருவது என்பது சர்வசாதாரணமாகி விட்டது.

ஆகவே் குறிப்பிட்ட அளவுப்படி செய்யப்பட்ட பிரமிட்டுக்கள் பிரபஞ்சத்தில் இருந்து சக்திகளை தன்பால் இழுத்து வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. பிரமிட்டுச் சக்திகள் தற்போது வாஸ்து தோஷ பரிகாரங்களுக்கும் பரவலாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன. சீன வாஸ்து சாஸ்திரமான பெங்சூயி முறையில் ஒலிஎழுப்பும் விண்ட்சிம்கள்- பாகுவா யந்திரம் வரைந்த கண்ணாடிகள், பெரிய நிலைக்கண்ணாடிகள், மீன் தொட்டிகள், செயற்கை நீரூற்றுகள், ஒளி விளக்குகள் ஆகியவற்றை வாஸ்து பரிகாரமாக உபயோகிக்கிறார்கள்.

அதற்குப் பதிலாக இப்போது வாஸ்து தோஷ நிவாரணத்துக்கு பிரமிட்டுக்களைக் கட்டி தொங்க விட்டும் பிரமிட்டுக்களை சரமாகச்சேர்த்து பல வண்ணங்களில் தேவையான இடங்களில் கட்டிவைத்தும் அலங்காரமாக வண்ணப்பூச்சுக்கள் அடித்த பிரமிட்டுக்களை வரவேற்பு அறைகளில் வைத்தும் வீடுகளில் முன்பக்கத்தில் உள்ளே வரும் வாசல் கதவுக்கு மேலும் பக்கங்களிலும் பிரமிட்டுக்களை வைக்கலாம்.

வீட்டுக்கதவுக்கு நேரே மரம், கம்பங்கள், சுவர்கள் போன்ற தோஷங்களுக்கும் வீட்டுக்கு முன்பு பிரமிட்டுக்களை அமைத்து பரிகாரம் செய்து கொள்ளலாம். இதுபோல பிரமிட்டுச் சக்திகளின் உபயோகம் நிறையவுள்ளது.




# மெழுகுவர்த்தியின் ஒளியில் பரீட்சை எழுதிய மாணவர்கள்

(மட்டக்களப்பு)

மட்டு. படுவான்கரைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீசிய பலத்த காற்று மற்றும் அடைமழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் மட்டக்களப்பு வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய பரீட்சை நிலையத்தில் சுமார் 100 மாணவர்கள் பரீட்சை எழுதுகின்றனர்.

அவர்கள் காக்காச்சிவட்டை, பலாச்சேனை, வேற்றுச்சேனை, 37 ஆம் கிராமம், மாலையர்கட்டு, பாலையடி வட்டை போன்ற பல பின்தங்கிய கிராமங்களிலிருந்து வருபவர்களாவர்.

அங்கு பெய்த பெரு மழையால் பல பகுதிகளிலும் வெள்ளம் 4 அடி வரை கரைபுரண்டோடியது. எனவே, அவர்கள் தோணி, படகு போன்ற பல்வேறு மார்க்கங்களில் பல வசதியீனங்களுக்கு மத்தியில் கொண்டு வரப்பட்டார்கள்.

அவர்கள் நனைந்து அரைகுறையாக நேற்று முன்தினம் காலை பரீட்சை மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு மின்சாரம் இல்லை. அடை மழையால் சூழல் இருள் நிறைந்து காணப்பட்டது.

இம்மாணவர்கள் அருகிலுள்ள கடையொன்றில் மெழுகுவர்த்தி வாங்கி அவ் வெளிச்சத்தில் ஒருவாறு குளிருக்கு மத்தியில் பரீட்சை எழுதினர்.

இடை யிடையே அடிகாற்றில் மெழுகுவர்த்தி அணையும் பின்பு ஒருவாறு பற்ற வைத்து பலத்த அசௌகரியங்களுக்கு மத்தியில் கணிதப் பரீட்சை எழுதி முடித்தனர். (அ-2)

## திறப்புக்கோர்வை கண்டெடுப்பு

(யாழப்பாணம்)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு அருகிலிருந்து திறப்புக்கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ள முடியும். (அ-9)

# பட்டதாரி பயிலுநர் நியமனம் வழுங்கல்



(மன்னார்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மன்னார் மாவட்ட பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 172 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் முதற் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டது. இதில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திர உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டு நியமனங்களை வழங்கி வைத்தனர். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா கதைகள்

# விசித்திர வினாக்கள்



மங்கம்மாவின் மீது அவளது பேர்த்தி இலட்சுமியை வளர்க்கும் சுமை விழுந்தது. ஏனெனில் இலட்சுமியின் பெற்றோர் ஒரு விபத்தில் இறந்துபோனார்கள். மங்கம்மாவும் அவளை நன்கு படிக்க வைத்து பெரியவளாக்கி விட்டாள்.

அதன் பின்பு அவள் அப்பெண்ணின் திருமணம் பற்றி கவலைப்படலானாள். அப்போது அவளுக்கு தன் மகள் சோமுவோடு படித்த அருணாசலத்தின் நினைவுவந்தது. அருணாசலம் பட்டணத்திற்குப்போய் வியாபாரம் செய்து பெரும் பணக்காரன் ஆகிவிட்டான்.

அவனுக்கு இரு மகன்கள் இருந்தார்கள். மூத்தவன் நன்கு படித்தவன். அழகானவன். இதை எண்ணிப் பார்த்து மங்கம்மா இலட்சுமிக்கு ஏற்ற கணவன் அருணாசலத்தின் மூத்தமகன்தான் என்று தீர்மானித்தாள். அதனால் பட்டணத்திற்குப் போய் அருணாசலத்திடம் பேசிவர அவள் எண்ணினாள்.

ஆனால் பட்டணம் போய்வர அவளிடத்தில் பணம் இல்லை. அதனால் வட்டிக்கடை வரதனிடம் போய் விடயத்தை சொல்லி கடனாக 200 ரூபாய் கொடுக்கும்படி கேட்டாள். வரதனோ உன் பேர்த்தியை அருணாசலத்தின் மகனுக்கா திருமணம் செய்து வைக்க நினைக்கிறாய்? இந்த யோசனையை விட்டுவிட்டு அருணாசலம் எவ்வளவு பெரிய பணக்காரன் அவனா உன் பேர்த்தியைத் தன் மருமகளாக ஏற்றுக்கொள்வான்? நீ பட்டணம் போவது வீணே. நன்கு யோசித்து பார் என்று கூறி அனுப்பிவிட்டான். மங்கம்மாவும் கவலையுடன் தன் வீட்டிற்கு திரும்பிச் செல்லலானாள்.

வழியில் அவளை அவ்வூர் புரோகிதர் புருசோத்தமன் கண்டு என்னம்மா! எங்கே போய்விட்டு வருகிறீர்கள்? ஏன் கவலையுடன் இருக்கிறீர்கள்? என்று கேட்டார். அவளும் இலட்சுமியின் திருமணம் பற்றித்தான் பட்டணம் போய் அருணாசலத்திடம் பேச நினைத்ததையும் அதுபற்றி வரதன் கூறியதையும் சொன்னாள்.

அதைக்கேட்ட புருசோத்தமன் நீங்கள் கவலைப்படாதீர்கள். நானும் சோமுவும் அருணாசலமும் ஒரே பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள். எனவே நான் பட்டணத்திற்குப் போய் அருணாசலத்தைக்கண்டு பேசி நல்ல முடிவுடன் வருகிறேன் என்று கூறி அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பினார்.

இதன்பின்பு புருசோத்தமன் பட்டணத்திற்குப்போய் அருணாசலத்தைக்கண்டு பேசிவிட்டு வந்தான். அவன் நேராக மங்கம்மாவின் வீட்டிற்குச்




சென்றார். அவர் ஒரு வெள்ளிச் செம்பை அவளிடம் கொடுத்து இதுபற்றி பின்பு சொல்கிறேன்.

முதலில் அருணாசலம் கேட்கச் சொன்ன இரு கேள்விகளை உன் பேர்த்தி இலட்சுமியிடம் கேட்கச் சொல்லி இருக்கிறார். அவனுடைய கேள்விகளுக்கு சரியான பதில்களை அவள் கூறிவிட்டாள் அவளைத்தன் மருமகளாக ஏற்றுக்கொள்வதாகக் கூறினான். அவனது முதற்கேள்வி இதுதான். கம்பர் இராமாயாணத்தை எழுதினார் அல்லவா? அதற்கு அவர் வைத்த பெயர் என்ன? அடுத்தகேள்வி மனிதன் கடவுளிடம் தான் விரும்பும் போது மட்டுமே தனக்கு மரணம் ஏற்படவேண்டும் என்ற வரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டால் அவன் எப்போது இறப்பான்? இந்த இரண்டு கேள்விகளுக்கும் உன் பேர்த்தி சரியான பதில்களைச் சொல்கிறாளா என்று பார்ப்போம் என்றார்.

மங்கம்மாவும் இதென்ன விசித்திரமான கேள்வியாக உள்ளதே? கம்பர் எழுதியது கம்பராமாயணம்தான். வால்மீகி படைத்த இராமாயணம் வால்மீகி இராமாயணம் என்பது போலத்தான் இதுவும் மரணம் வேண்டாம் என விரும்பிவரம் வாங்கியவன் சாக விரும்புவானா? எனவே அச்சமயத்தில் அங்கு கதவின் ஓரத்தில் நின்று கேட்டுக்கொண்டு நின்ற இலட்சுமி சாதாரணமாக எல்லோருக்கும் கம்பர் தாம் எழுதிய இராமாயணத்திற்கு என்ன பெயர் வைத்தார் என்பது தெரியாது தான்.

அந்தப்பெயர் இராமாவதாரம் என்பது எனக்கு தமிழ் கற்பித்த பண்டிதர் இதை எனக்கு சொல்லியிருக்கிறார். இரண்டாவது கேள்விக்கான விடையையும் கூறுகிறேன். மனிதன் தனக்கு மரணம் வரவேண்டும் என்று தான் விரும்பும்போது மரணம் ஏற்படவேண்டும் என்ற வரத்தைக் கடவுளிடம் இருந்து பெற்றவனும் விரும்புவான். வில் வண்டியில் ஆரம்பப் பயணம் சுகமாகவே இருக்கும். ஆனால் தொடர்ந்து அதிலேயே பயணம் செய்தவாறே இருந்தால் அலுப்புத் தட்டி சிரமமாகத்தோன்றும். இது போலதான் வாழ்க்கையிலும் ஆரம்பத்தில் சுகமாக இருந்தாலும் போகப் போக அலுப்புத்தட்டி விடும். அதனால் முடிவில் அவன் மரணத்தை அடையவே விரும்புவான் என்றாள். அதைக்



கேட்ட புருசோத்தமன் பேஷ் இந்த விடைகளை எழுதி என்னிடம் கொடு. அடுத்து வெள்ளிச் செம்பு பற்றிய விடயம். இது நிறைய நெய் இருக்கிறது.

இந்த நெய்யை நாளை மாலைக்குள் வெண்ணெய்யாக ஆக்கிவிட வேண்டும். உன்னால் இதைச் செய்யமுடியுமா? என்று இலட்சுமியிடம் கேட்டான். அவளும் இதுதானா? வெகு சுலபமாயிற்றே. நாளை மாலைக்குள் இந்த நெய்யை வெண்ணெயாக்கி காட்டுகிறேன் என்றாள்.

அவள் அன்றிரவு அந்த நெய்யில் சிறிது எடுத்து ரவா உருண்டை செய்தாள். மீதநெய்யை மறுநாள் காலையில் விற்று அந்தப் பணத்தில் வெண்ணெயை வாங்கி செம்பில் நிரப்பினாள்.

மாலையில் புருசோத்தமன் வந்து வெள்ளிச்செம்பு நிறைய வெண்ணெய் இருந்தது கண்டு ஆச்சரியப்பட்டார். இலட்சுமியும் அந்த வெண்ணெய் எப்படி வந்தது என்பதை விபரமாககூறி வெள்ளிச் செம்பை வெண்ணெயோடு அவளிடம் கொடுத்தாள். அவரும் ஆஹா! அருணாசலம் கேட்ட விசித்திர கேள்விகளுக்கு எல்லாம் நீ சரியான பதிலை அளித்துவிட்டாய்.

இவ்வளவு புத்திசாலியான உன்னை அருணாசலம் கண்டிப்பாக தன் மருமகளாக்கிக் கொண்டு விடுவான். இதில் சந்தேகமே இல்லை என்று மகிழ்ச்சி ததும்பக் கூறினான்.

மறுநான் புருசோத்தமன் பட்டணத்திற்குப் போய் அருணாசலத்தைக்கண்டு அவன் கேட்ட கேள்விகளுக்கு இலட்சுமி எழுதிக்கொடுத்த விடைகளை கொடுத்ததோடு வெண்ணெய் உள்ள வெள்ளிச் செம்பையும் கொடுத்தார். விடைகளைப் படித்த அருணாசலம் மகிழ்ந்து போய் ஆஹா இந்தப் புத்திசாலிப் பெண்தான் என மருமகளாக வேண்டும்.

புருசோத்தமா எனக்கு இப்படிப்பட்ட மருமகளை அளித்ததற்கு உனக்கு நான் மிகவும் கடன் பட்டிருக்கிறேன். இனி திருமணத்திற்கான எற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

முதல் வேலையாக நான்போய் மங்கம்மாவை கண்டு முறைப்படி பெண்கேட்கவேண்டும் என்றான்.

அதன்பின்பு மளமளவென்று திருமணவேலைகள் நடந்தன. ஒரு நல்லமுகூர்த்தத்தில் அருணாசலத்தின் மகனுக்கும் இலட்சுமிக்கும் விமரிசையாக திருமணம் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் கண்ணிவெடியில் சிக்கி பத்து சிறுமிகள் மரணம்



ஆப்கானிஸ்தானில் கண்ணி வெடியில் சிக்கி 10 வயதிற்குட்பட்ட சிறுமிகள் பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் நங்கர்கச் பகுதியை சேர்ந்த பாடசாலை மாணவிகள் விறகு சேகரிப்பதற்காக காட்டுப் பகுதிக்கு சென்றனர். அப்போது அங்கு புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கி அவர்கள் 10 பேரும் உடல் சிதறி பலியாகினர்.

கடந்த 20ஆண்டுகளாக, கண்ணி வெடியில் சிக்கி பலர் பலியாகி வருகின்றனர். இது வரையிலும் 7 இலட்சம் கண்ணி வெடிகள் இப்பகுதியில் அகற்றப்பட்டுள்ளது குறுப்பிடத்தக்கது. (அ-2)

# சர்ச்சைக்குரிய தீவை விட்டுக் கொடுக்க முடியாது

## ஜப்பானின் புதிய பிரதமர் அறிவிப்பு

தீவுப்பிரச்சினையில் சீனாவுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் ஜப்பானுக்கே சொந்தமான பகுதி என்றும் அந்நாட்டின் பிரதமராக பொறுப்பேற்கவுள்ள ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் சுதந்திர ஜனநாயக கட்சி (எல்டிபி) தலைமையிலான கூட்டணி 300 இற்கும் மேற்பட்ட இடங்களில் அமோக வெற்றி பெற்றுள்ளது.

இதையடுத்து, அக்கட்சியின் தலைவர் ஷின்சோ அபே அடுத்த பிரதமராக பொறுப்பேற்கவுள்ளார். அபேவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன் புதிய அரசுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாற்றிய அவர் தீவுப் பிர்ச்சினையில் சீனாவுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்தார்.

மேலும் எங்கள் கட்சி தலைமையில் புதிதாக பதவியேற்க்வுள்ள அரசுக்கு மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார வல்லரசு நாடான ஜப்பானின் பொருளாதாரம் சர்வதேச நிதிநெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டப்படி இந்தத் தீவுக் கூட்டங்களை ஜப்பான் சொந்தம் கொண்டாடுவதுடன் தனது கட்டுப் பாட்டில் வைத்துள்ளது.

இது தொடர்பாக மற்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் இல்லை. தேசிய நலனை கருத்தில் கொண்டு ஜப்பான் மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இந்த விடயத்தில் சீனா சற்று பின்தங்கி உள்ளது. எனவே, இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து அந்த நாடுதான் சிந்திக்க வேண்டும் என்றார். (அ-2)

# நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஆயிரம் கைதிகள் விடுதலை

## ஜேர்மனி முடிவு செய்தது

நத்தார் பண்டிகையையொட்டி ஆயிரம் கைதிகளை விடுதலை செய்ய ஜேர்மனி முடிவு செய்துள்ளது.

இது குறித்து நீதித் துறையின் தகவல் தொடர்பாக கூறுகையில், கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ஆயிரம் சிறைக்கைதிகள் நன்னடத்தை அடிப்படையில் விடுவிக்கப்படவுள்ளனர்.

கொடூரமான வன்முறை, தீவிரவாத, திருட்டு மற்றும் போதை பொருள் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு இந்தப் பொதுமன்னிப்பு கிடையாது என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் இவ்வாண்டு அதிகபட்சமாக நார்த் ரைன் -வெஸ்ட் பேலியா மாநிலத்தில் 710 பேர் விடுதலை செய்யப்படுகின்றனர். அடுத்ததாக ஹெசி மாநிலத்தில் 150 தொடக்கம் 200 பேர் வரை விடுதலையாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேக்ஸனி, பவேரியா ஆகியன இந்த விடுதலைக்கு மறுப்பு தெரிவித்துவிட்டன. (அ-2)

# புதிய தொழில்நுட்பம் வளமான இந்தியாவை உருவாக்கும்-ராகுல்

புதிய தொழில்நுட்பம் வளமான வருங்கால இந்தியாவை உருவாக்கும். ஜனநாயகத் தொழில்நுட்பம் இந்தியாவிற்கு அவசியம் தேவை என காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

டில்லி ராஜீவ் காந்தி கல்வி நிறுவன தொழில்நுட்ப கருத்தரங்கு ஒன்றில் அவர் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அமெரிக்க இந்திய விஞ்ஞானியான விஜயகுமாருடன் அவர் கலந்துரையாடினார்.

இதன்போது வளமான இந்தியா குறித்து அவர் உரை நிகழ்த்துகையில்,

புதிய தொழில்நுட்பம் வளமான வருங்கால இந்தியாவை உருவாக்கும். ஜனநாயக தொழில்நுட்பம் இந்தியாவிற்கு அவசியம் தேவை. வளமான இந்தியாவை உருவாக்க நாட்டின் முன்னேற்றம் மற்றும் மனிதநேயத்துடன் கூடிய புதிய தொழில்நுட்ப பயன்பாடு குறித்து இளைஞர்கள் ஆராய வேண்டும்.

தொழில்நுட்பம் நம்மை அடிமையாக்கும் என்று நான் நினைக்கவில்லை. நாம் நம்மையே ஆள வேண்டும். ராஜீவ் காந்தி கல்வி நிறுவனம் கணனி தொழில்நுட்பத்தை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே ரோபோவை இங்கு அறிமுகப்படுத்தியது என்றார் .(அ-2)

# உலகம் அழிந்து விடும் பீதியை கிளப்பியோர் கைது

இந்த வாரம் உலகம் அழிந்து விடும் என பீதியை கிளப்பிய 93 பேர் சீனாவில் கைது செய்யப்பட்டனர்.

தென்அமெரிக்காவில் புராதன காலத்தில் வாழ்ந்த மாயன் இனத்தவரின் கலண்டரில் 21.12.2012 உலகம் அழியும் என குறிப்பிடப் பட்டுள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

உலக முழுவதும் இந்த கலண்டரின் கருத்தை நம்பும் பலர், உலகம் அழிவதை தடுப்பதற்காக சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர். சீனாவில் அல்மைட்டி காட் என்ற அமைப்பை சேர்ந்தவர்கள் இந்த வாரம் உலகம் அழிந்து விடும். எனவே, இந்த அமைப்பில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்களை எல்லாம் ஒப்படைத்து விட வேண்டும் என கூறியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் சீனாவின் புஜியான், ஹீபி, சின்ஜியாங், குங்காய் உள்ளிட்ட பல மாகாணங்களில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மக்களை பீதியடைய செய்ததற்காக இந்த அமைப்பை சேர்ந்த 93 பேரை சீன பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ-2)

# துங்குரகுவாவில் உள்ள எரிமலை குமுறுகிறது

ஈக்குவடோர் நாட்டில் எரிமலையொன்று குமுற தொடங்கி உள்ளதால் அப்பகுதியில் உள்ள மக்கள் வெளியேறும்படி எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் துங்குரகுவா என்ற இடத்தில் உள்ள எரிமலை தற்போது குமுற தொடங்கி உள்ளது.

குறித்த எரிமலை இரவு நேரத்தில் வழக்கத்தை விட கூடுதலாக நெருப்பை கக்கி வருகிறது.

மேலும் எரிமலை தூக்கி எறியும் சில பாறைகள் மற்றும் சாம்பல் குடியிருப்பு பகுதியில் மண்டிக் கிடக்கிறது.

குறிப்பாக பனோஸ் டி அகுவா சான்டா நகரப்பகுதி முழுவதும் ஒரே சாம்பலாக காணப்படுகிறது.

காற்றில் மாசு கலந்துள்ளதால் எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொதுமக்களை ஈக்குவடோர் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.



சுமார் 5 ஆயிரம் மீற்றர் உயரமுடைய துங்குரகுவா எரிமலையை தவிர ஈக்குவடோர் நாட்டில் மேலும் 7 எரிமலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நீதிபதி உட்பட மூவரின் தலைகள் துண்டிப்பு

உக்ரைன் நாட்டில் நீதிபதி, அவரது மகன் மற்றும் மகனின் காதலி தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

உக்ரைன் நாட்டின் கஹார்கிவ் மாகாண நீதிபதி வொலோ டைமர்ட்ரோபர் (வயது 58) இப்பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் மகனுடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் திடீரென கடந்த 15 ஆம் திகதியன்று மிக கொடூரமான முறையில் கொல்லப்பட்ட நிலையில் நீதிபதி, அவரது மகன் மற்றும் காதலி பிணமாக கிடந்தனர்.

இதனையடுத்து இவ்விடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டதுடன் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து பொலிஸார் கூறுகையில்,

வீட்டில் சில பொருட்கள் காணாமல் போயிருந்தால் கொள்ளையடிக்கும் திட்டத்துடன் புகுந்த கொள்ளையர்கள் குறித்த மூவரும் கொலை செய்து தப்பியோடி இருக்கலாம் என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே கடந்த் 15 ஆம் திகதி அந்நாட்டின் நீதிபதிகள் தினம் என்பதால் கொலைக்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்பது குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# ரோம்னி போல் வேடமிட்டு அமெ.வில் வங்கி கொள்ளை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமாவிற்கு எதிராக போட்டியிட்டு தோல்வியடைந்த மிட்ரோம்னி வங்கியில் கொள்ளையடித்து சென்றது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வெர்ஜீனியா மாகாணத்தில் வெல்ஸ் பர்ஸோ வங்கியின் கிளை உள்ளது. குறித்த வங்கிக்குள் நுழைந்த மர்ம நபர் பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளார்.

ஏணைனில்இவர் புளோரிடாமாகாண கொடியை போன்ற சட்டையும் மிட் ரோம்னி போன்று முகமூடியும் அணிந்திருந்தார். இதுகுறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# கடலூர் மாவட்டத்தில் மஞ்சள் மழை பொழிந்தது

நாட்டின் பல பாகங்களிலும் சிவப்பு மழை மற்றும் மீன் மழை பெய்துள்ளது மட்டுமன்றி வானத்திலிருந்து மர்மப்பொருட்கள் பூமியை நோக்கி வருகின்றன. இந்நிலையில் இந்தியாவில் மஞ்சள் மழை பெய்துள்ளது.

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அருகேயுள்ள புதுவுருத்தகிரி குப்பம் கிராமத்திலேயே மஞ்சள் மழை பெய்துள்ளது.

குறித்த பகுதியில் வானம் மேக மூட்டத்துடன் இருண்டு காணப்பட்ட நிலையில் திடீரென மஞ்சள் நிறத்தில் மழைத்தூறல் விழ ஆரம்பித்துள்ளது. இதைப் பார்த்தவர்கள் அதிர்ச்சியடைந்து மழைத்தூறலை கைகளால் துடைத்தபோது மஞ்சள் நிறத்தில் மா போன்று காணப்பட்டது.

இதனால் அச்சமடைந்த சிலர் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர். மஞ்சள் தூறல் இரண்டு நிமிடம் வரை நீடித்தது. மஞ்சளாக பெய்தது அமில மழை என தகவல் பரவியதை தொடர்ந்து கிராம மக்கள் ஏராளமானோர் அங்கு திரண்டனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் பாதிப்புக்குள்ளான பெண்கள் சுற்றுலா சென்றனர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப் பெண்கள் மத்தியில் கடந்தவாரம் ஏற்பட்ட திடீர் உளவியல் குழப்பத்தை அடுத்து அவர்கள் திருகோணமலைக்கு சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.



கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 6 ஆவது பெண்கள் படையணி முகாமில் இருந்த 15 தமிழ்ப் பெண் பயிலுநர்கள் கடந்த 11 ஆம் திகதி நள்ளிரவு திடீரென உளவியல் குழப்பத்துக்கு உள்ளாகினர்.

இதையடுத்து இராணுவத்தினரால் நள்ளிரவில் கிளிநொச்சி வைத்தியசாலைக்குத் கொண்டு செல்லப்பட்டு தனியான அறையில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டதன் பின்னரும் அவர்களை படை முகாமில் தங்க வைத்திருப்பது மீண்டும் உளவியல் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்பதால் கடந்த 13, 14 ஆம் திகதிகளில் திருகோணமலைக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் பிரெட்றிக் கோட்டை, கோணேசர் கோவில், கிண்ணியா, நிலாவெளி கடற்கரை, கன்னியா வெந்நீரூற்று போன்ற இடங்களுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இலங்கை இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்ட 103 தமிழ்ப் பெண்களில் 96 பேர் மட்டுமே இந்தச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிய வருகின்றது. ஏனையவர்களில் 3 பேர் க.பொ.த. சாதாரணதரத் தேர்வு எழுதுவதால் இந்தச் சுற்றுலாவில் பங்கேற்கவில்லை. மேலும் 4 பெண்கள் கலந்து கொள்ளாத நிலையில் அவர்கள் உளவியல் பாதிப்பில் இருந்து இன்னமும் முழுமையாக குணமடையாதிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# கல்வியாளர் சேவை

## விண்ணப்பப்படிவம் ஏற்கும் திகதி நீடிக்கப்பட்டது

இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதித்தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இத் திகதி நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆங்கில மொழி மூலம் ஆரம்பக்கல்வி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடவகுதிகள் தொடர்பான தகைமைகளிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்வியாளர் சேவையில் உள்வாங்கப்படுபவர்கள் தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை, ஆசிரிய மத்திய நிலையம் போன்ற இடங்களில் சேவைக்கு அமர்த்தப்படுவர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஒப்பான சம்பள அளவுத் திட்டத்தையும் சேவை நிபந்தனைகளையும் கொண்டதாக இச்சேவை விளங்குவது குறிப்பிடத்தக்கது. (அ-9)

# நட்டத்தை ஈடுசெய்யவே பெற்றோல் விலை அதிகரிப்பு

## காரணம் கூறுகிறார் பந்துல

நட்டத்தை ஈடுசெய்யும் நோக்கில் பெற்றோலின் விலை உயர்த்தப்பட்டதாக பெற்றோலிய வள அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோல் இறக்குமதி செய்யும் போது 10 முதல் 12 ரூபா வரையில் நட்டம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நட்டத்தை ஈடு செய்யும் நோக்கில் விலையேற்றம் அறிவிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.


ஒரு லீற்றர் டீசல் இறக்குமதி செய்யும் போது 16 ரூபாவும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் இறக்குமதி செய்யும் போது 26 ரூபாவும் நட்டம் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

மசகு எண்ணெய் இறக்குமதியினால் ஒரு லீற்றருக்கு 40 ரூபா நட்டம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (அ-2)

# முருகனிடம் இலங்கை குறித்த வரைபடங்கள் இருந்தனவாம்

## சிங்கள ஊடகம் தகவல்



இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான முருகனிடம் இலங்கை வரைபடங்கள் காணப்பட்டதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடத்தில் நடத்திய சோதனையின் போது இந்த வரைபடங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய சில வரைபடங்கள் முருகனிடம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கனடா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு முருகன் அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாற்றி வருவதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் இந்திய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நாள்தோறும் இலங்கையிலிருந்து முருகனுக்கு தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தியது யார் என்ற விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படவில்லை. புலம்பெயர் தமிழர்களில் ஒரு தொகுதியினர் தொடர்ந்தும் ஈழக் கோரிக்கைக்காக போராடி வருவதாக குறித்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களுக்கு விசேட பரீட்சை

## பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற முடியாத மாணவர்களுக்கு எதிர்வரும் காலத்தில் விசேட பரீட்சையொன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றாமையைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ எம்.என். ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.

தென் மாகாணம், மேல் மாகாணம் வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ மாகாணங்களில் இவ்வாறான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயினும் வடமேல், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மாணவர்கள் பரீட்சைக்கு சமுகமளிக்காத சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாது போன மாணவர்களுக்கு அநீதி ஏற்பட இடமளிக்கப்படமாட்டாதென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சாதாரண பொதுமக்கள் மீது வரிச்சுமை திணிக்கப்படுகின்றது

## ஐ.தே.க. பிரதித் தலைவர் ஆதங்கம்

(கொழும்பு)

ஒரு லீற்றர் பெற்றோலை 117 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கிரிகொல்லாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு லீற்றர் பெற்றோலின் மூலம் அரசாங்கம் இதுவரையில் 32 ரூபா இலாபம் ஈட்டியதாகவும் தற்போது அந்தத் தொகை 42 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

செல்வந்தர்களுக்கு சலுகைகளை வழங்கி வரும் இந்த அரசாங்கம் சாதாரண பொதுமக்கள் மீது வரிச் சுமையை திணிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பணத்தைக்கொண்டு லம்போகினி மோட்டார் பந்தயக் கார்களை இறக்குமதி செய்ய 200 மில்லியன் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பெற்றோல் விலை உயர்வினால் சாதாரண பொதுமக்களே அதிகளவில் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டிள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோலை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கம் 92 ரூபாவினை மட்டுமே செலவிடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் இந்தக் கருத்தை வெளியிடுவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# வரலாற்றை திரிவுபடுத்த இடமளிக்கமாட்டோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

வரலாற்று ஏடுகளை புறந்தள்ளி பணத்தாள்களுக்கு சுருளும் காலம் தற்போது உருப் பெற்று வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய சுவடிகள் திணைக்களத்தில் புதிய கட்டடத் தொகுதியை நேற்றைய தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், [illegible] நாட்டின் வரலாற்றை மீண்டும் புதிதாக எழுதி வருகின்றனர். டொலர் தாள்களைக் கொண்டு நாட்டின் வரலாற்றை திரிவுபடுத்த இடமளிக்கப்படமாட்டாது. சில பிரதேசங்களில் புள்டோசர் கொண்டு நாட்டின் வரலாற்றை அழிப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

எமது வரலாறு மற்றும் கடந்த காலத்தில் எமது நாட்டை ஆண்ட மன்னர்கள் குறித்து நாம் பெருமை கொள்ளக்கூடிய யுகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் அனைத்தையும் வென்ற விடும். எனவே நேரத்துக்குப் பணிந்து கடமை புரியுங்கள்.
– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கோழிகள் கூவின... நீவிர் இன்னும் துயிலுதியோ!

மார்கழித் திருவெம்பாவை இன்று ஆரம்பமாகின்றது. பத்துத் தினங்கள் அனுஷ்டிக்கப்படும் திருவெம்பாவை வழிபாடுகள் நிறைந்த அர்த்தமுடையவை.

சைவ சமயத்தில் இருக்கக்கூடிய வழிபாட்டு முறைகளில் திருவெம்பாவை வித்தியாசமானது.

அதிகாலை வேளையில் இறைவழிபாடு செய்வது அளவு கடந்த புனிதத்தையும் மனத் திருப்தியையும் நமக்குத்தரவல்லது.

மார்கழித் திருவெம்பாவை என்பது பெண்களுக்கான விரதமாகவும் கருதப்பட்டது. இளம் பெண்கள் அதிகாலை வேளையில் எழுந்து, நீராட தமது தோழியர்களையும் அழைத்துக் கொண்டு செல்வதாக அந்த விரதம் பொருள்படும்.

மார்கழி மாதத்தில் அதிகாலை வேளையில் நீராடுவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும் இறை பரம்பொருளை வழிபடுதல் என்ற மனத்திடத்தின் காரணமாக மார்கழி நீராடல் என்பது நடந்தேறுகின்றது.

உறங்குகின்ற தங்கள் தோழிகளை '... இன்னும் துயிலுதியோ ...' என்று எச்சரித்து உறக்கம் கலைக்கின்ற நுட்பம், மார்கழிக் குளிர் ஆயினும் அதிகாலை வேளையில் பெண்கள் எழுந்து விட வேண்டும் என்ற ஒழுங்கை சுட்டி நிற்கிறது.

இது தவிர, தான் அடையப் போகின்ற நாயகன் இறை சிந்தனையுடையவராக – இறை நம்பிக்கை உடையவராக – இறைவனை வழிபடுபவராக இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே இவ் விரதத்தின் மகிமை உரைப்படுகிறது. இதனை '... என் கொங்கை நின்னன்பர் அல்லாதோர் தோள் சேரக்க...' என்ற பாடல் வரிகள் சுட்டி நிற்கும்.

ஒரு காலத்தில் எங்கள் சைவத்தமிழ் பண்பாட்டில் இருந்த ஒழுக்கமுடைமையை எடுத்துக் காட்டுகின்ற திருவெம்பாவை இன்று சம்பிரதாய சடங்காகிப் போயிற்று.

சில ஆலயங்களில் முற்பகல் பத்து மணியளவில் கூட திருவெம்பாவை பாடப்படுவதைக் காண முடியும்.

எங்ஙனம் திருவெம்பாவை, நேரம்தாழ்த்திப் பாடப்படுகின்றதோ அது போன்று திருவெம்பாவை சுட்டி நிற்கின்ற உயர்ந்த பண்பாட்டின் பொருளும் பொருள் இழந்து போயிற்று.

இப்போதெல்லாம் கையடக்கத் தொலைபேசியில் எங்கள் பண்பாடு, விழுமியம் கரைந்து போகிறது.

இறை நம்பிக்கை – வழிபாடு உடையவர் வாழத் தெரியாதவர் என்றாயிற்று.

ஒற்றைக்காதில் தோடு, வெட்டிச் சரி செய்யப்பட்ட குரோட்டன்கள் போன்ற தாடிக் கோலங்கள், இடுப்பையும் அரைநாணையும் காட்டுகின்ற காற்சட்டைகள் என்ற ஒரு புதுக்கோலம் திருவெம்பாவையை அர்த்தமற்றதாக்கிவிட்டது.

பெண்களின் ஒழுக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை சிவ வழிபாட்டினூடாக தமிழினத்திற்கு தந்த மணிவாசகப் பெருமானின் திரு வெம்பாவைப் பாடலின் பொருள் உணர்ந்து வாழ்கின்ற பழமையை மீண்டும் நிலை நாட்டின் தமிழ் பண்பாடும் ஒழுக்கமும் என்றும் விருட்சமாகி தழைத்து நிற்கும்.

# நாட்டை நேசிப்பதாலேயே 13ஆவது திருத்தத்தை ஆதரித்தோம்

## விளக்கமளிக்கிறார் பிரபா கணேசன்

(கொழும்பு)

13ஆவது திருத்தத்தை ஆதரித்த 31 பேரும் பிரிவினைவாத சக்திகளின் நிழல்கள் என ஜாதிக ஹெல உறுமயவும் துரோகிகள் என ஜே.வி.பியும் தெரிவித்துள்ளமை அவர்களின் அரசியல் அறியாமையை காட்டுகிறது. மாறாக 13ஆவது திருத்தச்சட்டத்தை ஒழிப்பதற்கு எதிராக நாள் உட்பட கையெழுத்திட்ட 31 பேரும் தேசத்தை பிரிவினையிலிருந்து காக்கும் நாட்டை நேசிப்பவர்களாவோம் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் , 13ஆவது திருத்தச் சட்டத்தை விட அதிகமான தீர்வையே தமிழ் மக்கள் எதிர் பார்க்கின்றனர். அரச பங்காளி கட்சிகளான ஜாதிக ஹெல உறுமயவும் தேசிய சுதந்திர முன்னணியும் 13ஆவது திருத்தத்தை ஒழித்து நாட்டை பிரிவினைவாதத்திற்கு அழைத்து செல்லப் பார்க்கும் தேச துரோகிகளாகும்.

தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீரை வடித்துக் கொண்டிருக்கும் ஜே.வி.பியும் இந்த துரோக பட்டியலில் உள்ளடங்குவார்கள். தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை சுதந்திரத்திற்கு பின் பெரும்பான்மையினத் தலைவர்கள் வழங் காததனாலேயே கடந்த 30 வருட காலம் யுத்தத்தினால் சிங்கள மக்களும் பாரிய துன்பத்திற்கு உள்ளானார்கள் என்பதை இந்த மூன்று கட்சிகளின் மூளையில்லாத தலைவர்களுக்கு புரியவில்லையா?

குறைந்த பட்ச அதிகார பகிர்வையே இல்லாது ஒழித்து மீண்டும் நாட்டில் பயங்கரவாதத்தை தோற்றுவித்து தமது சிங்கள மக்களையும் நெருப்பினில் தள்ளி அதன் மூலம் இனவாத வாக்குகளைப் பெற்று குளிர்காய முயலும் இவர்களை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்கள இன வாதம் பேசியதனாலேயே அரசியலில் ஜே.வி.பி. இன்று படுதோல்வியடைந்து பலமிழந்து நிற்கின்றது.

13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க கூடாது என்ற கடிதத்தில் கைச்சாத்திட்டவர்கள் 31 பேர் மட்டுமல்ல. இன்னும் பல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட தயாராக இருக்கின்றார்கள். 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

அதிகாரத்தைப் பகிர்வதன்மூலம் நாட்டை பிரிவினையிலிருந்து தடுப்போம். இனவாதிகள் அரசாங்கத்திற்கு உள்ளே இருந்தாலும் சரி வெளியே இருந்தாலும் சரி அவர்களை எதிர்ப்பதற்கு ஒருபோதும் தயங்கமாட்டோம். அதேபோல் 13 ஆவது திருத்தத்திற்கு எதிரானவர்களையும் ஆதரவாக குரல்கொடுத்த எங்களையும் ஜனாதிபதியே ஆட்டுவிக்கிறார் என்ற ஜே.வி.பியின் குற்றச்சாட்டு சோடிக்கப்பட்டதொன்றாகும்.

ஜனாதிபதி 13ஆவது திருத்தச்சட்டத்தை ஒழிப்பதாக எவ்விடத்திலும் கூறியதில்லை. பாராளுமன்றம் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் அதிகளவு அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற தீர்மானம் எடுத்தால்தான் அதனை உடனடியாக அமுல்படுத்துவதாக எம்மிடம் உறுதியளித்திருக்கிறார் என்பதனையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே இவ்விடயத்தில் அவர் உறுதியாக நிற்பார் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது என்றார். (அ-2)

# இறைவன் மணிவாசகரை ஆட்கொள்ளல்

சைவத்திருமுறைகள் பன்னிரெண்டில் எட்டாந் திருமுறையாக வகுக்கப் பெற்றது மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய தித்திக்கும் திருவாசகம் ஆகும். மாணிக்கவாசகர் பாண்டியனுக்கு நல்லமைச்சராக இருந்தபோது அரசியல் நிமித்தம் திருப்பெருந்துறை செல்ல நேர்ந்தது.

அப்பெருந்துறையில் அவனருளால் பாச ஒழிவும் சிவத்துவப் பேறும் பெறும் பருவம் கனிந்து வந்தது.

இந்நிலையில் திருவாதவூரடிகளது பந்தமறும் எல்லையை எதிர்பார்த்தினிது இருந்த இறைவன் ஞானதேசிகத் திருமேனிகொண்டுகைலையங்கிரியை நீங்கி பூதகணங்கள் சூழ எழுந்தருளினார்.

மானிட வடிவங்கொண்டு வந்த பரம்பொருள் பெருந்துறையில் உள்ள அழகிய பூஞ்சோலையின் கண்ணே ஒரு குருந்தமர நிழலில் சிவகணங்களா கிய மாணவர் சூழ யோகாசன நிலை யில் வீற்றிருந்தருளினார்.

திருவாதவூரர் திருப்பெருந்துறையை அண்மித்தும் குருந்தமர நிழலில் கொன்றை மாலை அணிந்த சிவபெருமான், குரு இலட்சணம் பொருந்த, ஞானாசிரியராக சிவகணங்கள் சூழ பொன் போலுந் திருமேனி, பேரொளி வீச வீற்றிருக்கும் அரிய காட்சியைக் கண்ணாரக் கண்டார்.

சிவபெருமானது பொன்போன்ற திருமேனியைத்தரிசித்த வாதவூரர் , ஐயா உமது செங்கைமீது , பொருந்தி இருக்கும் திருமுறை யாது? என வினவ, அதற்கு இது செம்மையாகிய சிவஞான போதம் என்று இறைவன் கூறியருளினார். அதுகேட்ட திருவாதவூரடிகள், சுவாமி சிவமாவது யாது? ஞானமாவது யாது , போதம் என்றால் என்ன என்ற மூன்று வினாக்களுக்கும் விடைதந்து அருளுக என்றார்.

சிவமாவது நித்தமுத்த சுத்த சித்தாகிய ஒரு வஸ்து,அதனை தேர்தல் ஞானமாகும். போதமாவது தேர்ந்ததனைத் தெளிதலாம். இவ்வாறு அனுபூதி நிலையில் வைத்து நிச்சயம் செய்தலேயாம். இவ்வண்ணம் சிந்தை உருகும் வரை உரை செய்தார் பரமாசாரியார்.

இது கேட்டு மனம் மகிழ்ந்த மணிவாசகப் பெருமான் தேவரீருடைய திருவடிகளை அடைய இப்போதே என்னை ஆட்கொள்ள வேண்டும், எனக் கண்ணீர் வார வணங்கி நின்றார். திருவாதவூரடிகளைப் பரமாசாரியார் நோக்கி, நீ முன் இயற்றிய தவத்தினாலே இன்று உன்னை ஆட்கொள்ள இப்பெருந் துறைக்கு வந்தோம். ஆதலால் நீ வருந்த வேண்டாம் எனத்திருவாய் மலர்ந்தருளினார்.

திருப்பெருந்துறையில் உள்ள பூஞ்சோலையின் கண்ணே திருவடி தீட்சைக்கு உகந்த பூக்கோயில் அமைத்து, நோக்கி யோகாசனமாக வீற்றிருக்க, திருவாதவூரரும் தீர்த்தமாடி, திருநீறணிந்த சிவபெருமான் திருமுன் குறுகி நின்று , திருவமுதை, பொன் கலத்தில் விருப்போடு படைத்து, தொழுது நிற்க, தவப் பெருவ

**பொ.சிவப்பிரகாசம்**
**கொழும்புத்துறை**

டிவங் கொண்ட சிவபெருமான், திருவாசகம் என்னும் தேனை, இந்த உலகுக்கு அருளிய திருவாதவூரருக்கு , திருவைந்தெழுத்தை உபதேசித்து மணிவாசகப் பெருந்தகையின் சிரசிலே ஞானாசக்தி, கிரியாசக்தி ஆகிய இரு திருவடிகளையும் வாதவூரர் மனம் மகிழுமாறு திருவடி தீட்சை செய்தருளி மணிவாசகரை தனது ஞானப்புதல்வ ராக ஏற்றுக்கொண்டார் சிவப்பரம்பொருள்.

அற்புதனிருந்தருள் பெருந்துறையடைந்தே
சிற்பர முணர்ந்துதிரு வாசக முரைப்
பார் முற்பக லருந்தவ முயன்றுபெறு
மன்பாலுற்பவ மொழிந்தமை மொழிந்
தீடு ரொழிப்பாம் *–வாதவூரர் புராணம்–*

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(கிளிநொச்சி)

பச்சிளைப்பள்ளி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ-9)


## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கண்டி வீதி மாம்பழம் சந்தியில் கூலர் என்ஜீனியரிங் பிறைவேட் லிமிட்டெட் எதிர்வரும் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 5.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-9)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## வாழ்க்கையே விளக்கம்



வேதங்களுக்கும் அவற்றின் இலட்சியங்களுக்கும் உயிருடன்கூடிய விளக்கத்தை ஒருயுகம் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய இந்திய சமய வாழ்க்கையை தன்னுடைய ஒரு வாழ்க்கையில் இராமகிருஷ்ணர் வாழ்ந்து காட்டியுள்ளார்.

வேதங்கள், உபநிடதங்கள், பாகவதம், புராணங்கள் ஆகியவற்றின் அடிப்படை உண்மைகளை நீங்கள் அறிய விரும்பினால் முதலில் ஸ்ரீராமகிருஷ்ணனின் வரலாற்றையும் அவரது உபதேசங்களையும் படியுங்கள்.

அவர் என்ன் உபதேசித்தாரோ, அந்தக் கருத்துக்களுக்கேற்ற ஒரு சிறந்த முன்னுதாரணமாக வாழ்ந்தார்.

எந்த மகானின் உபதேசங்களை விடவும் அவரது வாழ்க்கை முழுவதுமே எல்லா உபநிடதங்களுக்கும் விளக்கமாக அமைந்திருந்ததோ– இல்லை, உபநிடதங்களின் சாரமே ஒன்றுதிரண்டு மனித உருவம் பெற்றிருந்ததோ– அந்த மகானின் திருவடிகளின் கீழ் அமரும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது.

இன்னும் தெளிவாகவே சொல்கிறேன்: நீங்கள் இதுபோன்ற பரிசுத்தமான வாழ்க்கையைப் பார்த்தோ, படித்தோ இருக்கவேமாட்டீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆளுநர் வெற்றிக்கிண்ண பூப்பந்து; உள்ளூராட்சி அமைச்சு சம்பியன்



ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்கான விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. மேற்படி போட்டிகளில் பூப்பந்தாட்டப் போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரி பூப்பந்தாட்டத் திடலில் நடைபெற்று வந்தது.

பூப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்றது. பெண்களுக்கான இறுதிப் போட்டியிலும் உள்ளூராட்சி அணியினை எதிர்த்து கல்வி அமைச்சு அணி மோதியது. இப்போட்டியில் உள்ளூராட்சி அமைச்சு இரண்டு தனிநபர் செற்களையும் ஒரு இரட்டையர் செற்றினையும் வென்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் உள்ளூராட்சி அணியும் கல்வி அமைச்சு அணியும் மோதியது. இப்போட்டியில் மூன்று தனி நபர் செற்களையும் கைப்பற்றிய உள்ளூராட்சி அணி சம்பியனாகியது.

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 22,23 (சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் ம.கிசாந்தன் (0771725432) என்பவருடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# காற்பந்து இறுதியாட்டங்கள்

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் நடைபெறும் என வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வயது அடிப்படையில் இடம்பெற்ற இப்போட்டித் தொடரில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள அணியின் விபரம் வருமாறு, 14 வயதுப் பிரிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் அல்வாய் றோ.க.வித்தியாலய அணியும் மோதவுள்ளன.



16 வயத்ப் பிரிவின் இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து அல்வாய் றோ.க.வித்தியாலய அணியும் மூன்றாமிடத்திற்கான போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

# ஆளுநர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்திற்கான வடமாகாண அமைச்சுகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளின் இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நல்லூர் ஸ்தான அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நடைபெறவுள்ள வலைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரதம செயலர் அலுவலக அணியை எதிர்த்து உட்கட்டுமான அமைச்சு அணி மோதவுள்ளது.

இதேவேளை ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரதம செயலர் அலுவலக அணியும் உள்ளூராட்சி திணைக்கள அணியும் ஒன்றையொன்று எதிர் கொள்ளவுள்ளன.

இதனைத் தொடர்ந்து திணைக்களங்களுக்கெதிரான ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறிழுத்தல் போட்டியும் நடைபெறவுள்ளது.

# சாரணர்களுக்கான கிரிக்கெட் போட்டி; சென்.அன்ரனிஸ் கல்லூரி சம்பியன்



சாரணர் போஜன் ஞாபகார்த்த நிதியத் தினால் வடமாகாண சாரணிய அணிகளுக் கிடையில் 6 பேர், 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி முருங் கன் கல்லூரி, தொண்டைமனாறு வீரகத்தி வித்தியா ,வவுனியா சாரணிய அணி உள்ளிட்ட சாரணர் அணிகள் மேற்படி சுற் றுப்போட்டியில் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத் திய கல்லூரி சாரணிய அணியும் ஊர்காவற் றுறை சென்.அன்ரனீஸ் சாரண அணியும் மோதியது. இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய ஊர்காவற்றுறை சாரணிய அணி 6 ஓவர்களில் 80 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாரணிய அணி 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


# மாகாண மட்ட றக்பி விரைவில்

மாகாண பாடசாலை அணிகளுக்கிடையிலான றக்பி போட்டித் தொடர் ஒன்றை விரைவில் நடத்த வடமாகாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

றக்பி போட்டிகள் வடமாகாணத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நிலையில் வீரர்களை மேலும் உற்சாகப்படுத்தும் வகையில் இப் போட்டியை நடத்துவதற்கு போட்டி அமைப்பாளர்கள் தீர் மானித்துள்ளனர். இப்போட்டி அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இடம்பெற அதிக வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு எதிராக போராடி வீழ்ந்தது இலங்கை



அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ளது. இலங்கை அணி போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், இறுதியில் தோல்வியைச் சந்தித்தது.

ஹோபார்டில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்திருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடை நிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பில் மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களையும், பிலிப் ஹியூஸ் 86 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 74 ஓட்டங்களையும், மத்யூ வேட் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும், டேவிட் வோர்ணர் 57 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இலங்கை அணி சார்பாக சானக வெலகெதர 3 விக்கெட்டுக்களையும், ஷமிந்த எரங்க ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி திலகரட்ண டில்சானின் 147 ஓட்டங்கள், அஞ்சலோ மத்யூஸின் 75 ஓட்டங்கள் பிரசன்ன ஜெயவர்த்தனவின் 40 ஓட்டங்களின் துணையோடு 336 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக பீற்றர் சிடில் 5 விக்கெட்டுக்களையும், நேதன் லயன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

தனது 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 278 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது.

அவ்வணி சார்பாக டேவிட் வோர்ணர், மைக்கல்கிளார்க், எட்கோவன் ஆகியோர் அரைச் சதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 5 விக்கெட்டுக்களையும், சானக வெலகெதர 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


393 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி அல்லது 130ற்கு மேற்பட்ட ஓவர்களை எதிர்கொண்டு துடுப்பெடுத்தாடித்தாடினால் வெற்றி தோல்வியற்ற முடிபு என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 119.2 ஓவர்களில் 255 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இலங்கை அணி மேலதிகமாக 10.4 ஓவர்கள் துடுப்பெடுத்தாட வேண்டியிருந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குமார் சங்கக்கார 63 ஓட்டங்களையும், திலான் சமரவீர 49 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 5 விக்கெட்டுக்களையும், பீற்றர் சிடில் 4 விக்கெட்டுக்களையும், ஷேன் வோட்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் பீற்றர் சிடில் தெரிவானார்.



# சிடில் பந்தை சேதப்படுத்தினார் இலங்கை குற்றச்சாட்டு



இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் பந்தைச் சேதம் செய்ததாக இலங்கை அணி நிர்வாகம் புகார் எழுப்பியுள்ளது.

அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 137 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் 9 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்நிலையில் போட்டியின் போது சிடில் நகத்தை கடித்துக் கொண்டு பந்தைச் சேதம் செய்ததாக இலங்கை அணியின் மேலாளர் சரித் சேனநாயகே புகார் தெரிவித்தார்.

ஆனால் இது குறித்து ஆட்ட நடுவர் கிறிஸ் பிராட் தனக்கு அதிகாரபூர்வ புகார்கள் எதுவும் வரவில்லை என்றார்.

இருப்பினும் நடுவரிடம் பந்து சேதம் குறித்து பேசியுள்ள கிறிஸ் பிரோட், பந்தை சிடில் சேதம் செய்ததற்கான வீடியோ ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் நடுவர்களும் அதனை ஆதரிக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

எனவே இந்த விவகாரம் இத்துடன் முடிபுக்கு வருவதாக அவர் தெரிவித்தார். சிடில் இப்போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொடர் பறிபோனதற்கு வேகபந்து வீச்சே காரணம்

## தோனி காட்டம்



இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி 1:2 என்ற கணக்கில் பின்தங்கி தொடரை இழந்தது.

4-வது டெஸ்ட் சமனிலையில் முடி படைந்ததைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இந்திய அணித்தலைவர் தோனி கூறுகையில்,

இத்தொடரை இழந்ததற்கு துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் வேகப்பந்து வீச்சாளர்களே காரணம்.

சுழற்பந்து வீச்சாளர்கள் தங்களது பணியை சிறப்பாகவே செய்தனர். 4 போட்டிகளிலும் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் சிறப்பாகவே பந்து வீசினார்.

வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக ஆடுகளம் இல்லாத போதும் அவர் அற்புதமாகச் செயல்பட்டார்.

ஆனால் நமது வேகப்பந்து வீச்சாளர்கள் சராசரியாகவே இருந்தனர் என்றும் அதே போல் அதிக ஓட்டங்கள் குவிக்காததும் தொடரில் பின்தங்கியதற்கு முக்கிய காரணம் எனவும் தெரிவித்தார்.

# மழை வெள்ளத்திற்கு...

நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் நேற்றுச் செவ்வாய்கிழமையுமாக கிழக்கு, மத்திய சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக பல பாகங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதோடு சில இடங்களில் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

ஆட்கள் உயிரிழந்த மற்றும் காணாமல் போன சம்பவங்களைப் பொறுத்த வரை அநேகமானவை மண் சரிவினாலேயே ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நீர்ப்பாசனக் குளங்கள் நிரம்பி வழிவதால் குளங்களின் வான் கதவுகளும் (முதகுகளும்) திறந்து விடப்பட்டதன் காரணமாகவே வீதிகளில் வெள்ளநீர் பாய்ந்தோடுகிறது.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வீதிகளிலும் ரயில் தண்டவாளங்களிலும் வெள்ள நீர் பாய்ந்தோடுவதால் ரயில் மற்றும் தரை வழிப் போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்கடும் மழை காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை, குருநாகல், கண்டி, நுவரெலியா, பதுளை, காலி, பொலனறுவை, புத்தளம் உள்ளிட்ட பலமாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இம்மழையினால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு காரணமாக ஏழு மாவட்டங்களில் 1129 குடும்பங்களைச் சேர்ந்த 4633 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

அதேநேரம் இவ்வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களில் 735 குடும்பங்களைச் சேர்ந்த 3021 பேர் 17 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு 66 வீடுகள் முழுமையாகவும் 695 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கும் உடனுக்குடன் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இதேவேளை, மழை தொடராகப் பெய்து வருவதால் கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் 24 மணி நேர மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி குமாரி வீரசிங்க கூறினார்.

இந்நான்கு மாவட்டங்களிலும் பல பிரதேசங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. அவற்றைக் கருத்திற் கொண்டே இம்முன்னெச்சரிக்கை விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, அவர் கண்டி மாவட்ட நிலைமை தொடர்பாக மேலும் கூறுகையில்,

நேற்று முன்தினம் முதல் பெய்த கடும் மழை காரணமாக அக்குரணைப் பிரதேசத்தில் சுமார் 8 அடிகளுக்கு வெள்ள நிலைமை ஏற்பட்டது. இதனால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் 150க்கும் மேற்பட்ட வீடுகளும் கடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மாத்தளை மாவட்டத்திலுள்ள ரத்தொட்ட பிரதேசத்தில் மண்சரிவினால் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவுரிமை மீறல்கள்...

கரிசனையில் தானும் பங்கேற்பதாக கூறினார்.

மனிதவுரிமையும் பேச்சுச் சுதந்திரமும் மதிக்கப்படுகின்ற கனேடிய நாட்டில் வாழ்கின்ற நாம். அதே உரிமைகளை கனேடியர்களின் உறவுகளும் பெறவேண்டும் என்று நினைக்கின்றோம்.

இலங்கை அரசு தனது நாட்டின் குடிமக்களது அடிப்படை மனிதவுரிமைகளை வழங்குவதுடன் அவர்கள் ஒன்றாக கூடி தங்களது எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிப்படுத்தும் உரிமையையும் மதிக்க வேண்டும் என தான் கேட்டுக்கொள்வதாகவும் கூறிப்பிட்டார்.

க்னேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் ஏற்கெனவே பல தடவை கூறியபடி, இலங்கையில் அமைதியான ஓர் தீர்வு ஏற்படவும் யாழ்.பல்கலைக்கழக பதற்றமான சூழ்நிலை முடிபுக்கு வரவும் தனது இணை ஆதரவை வழங்குவதாகவும் பாம் ஜில் தெரிவித்தார்.

அமைச்சர் பெயார்ட் இலங்கை பற்றிய தனது கருத்துக்களை தெரிவித்த போது அந் நாட்டில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல் மற்றும் இன அழிப்பு தொடர்பான ஓர் நீதியான விசாரணை நடத்தப்படுவதற்கு அந் நாட்டு அரசு ஒத்துழைக்க வேண்டும் என கோரியிருந்தார். மக்களது தேவைகளே முதன்மைப் படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் கருத்துக்களை வலியுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் பாம் ஜில் அண்மையில் இலங்கையில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான வன்முறை நிறைந்த சூழ்நிலை குறித்து தான் கவலையடைவதாகவும் சர்வதேச சக்திகள், அந் நாட்டு அரசின் மீது உரிய அழுத்தங்களை பிரயோகித்து மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்கும்படி கேட்குமாறு அனைத்து தரப்பினரையும் தாம் கோருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை வைர வியாபாரிகள்
இல.217 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6083, 0714182480

# கொடூரமான இரசாயன ஆயு...

படுகாயம் அடைந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு, காணாமல் போனவர்கள் கதி என்ன என்பன போன்ற விபரங்கள் வெளியாகவே இல்லை. போர் இறப்பு குறித்து ஐ.நா. வெளியிட்ட முதல் தகவலில் 40 ஆயிரம் பேர் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் கடந்தவாரம் வெளியான ஐ.நா.வின் இன்னொரு அறிக்கையில் 70 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் புள்ளி விபரங்களின் படி 2006 முதல் 2010ஆம் ஆண்டு வரை ஒரு இலட்சம் பேர் வன்னியில் காணாமல் போயுள்ளனர். இதுவரை இவர்களுக்கு என்னவாயிற்று என்றும் தெரியவில்லை.

இந்த உயிரிழப்புக்களும், மனித பாதிப்புக்களும் 35 சதுர கி.மீ.பரப்பளவில் 130 நாள்களில் நடந்துள்ளன.

பாதுகாப்பு வலயத்தில் வைத்து ஆட்லறிகள், மோட்டார்கள், றொக்கட் லோஞ்சர்கள், கிபிர் விமானங்களைப் பயன்படுத்தியே இலங்கைப் படையினரால் இவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதுவரை எந்த நாட்டிலும் பயன்படுத்தப்படாத, கொடூரமான இரசாயன ஆயுதங்களை அவர்கள் போரில் பயன்படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசு எந்தப் புள்ளிவிரங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்று கூறும் இலங்கை அரசு, குறைந்தபட்ச உண்மைகளைக் கூட ஏற்க மறுப்பதால் புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்ற வாக்குறுதியை அனைத்துலக சமூகம் நம்ப மறுக்கிறது.

போரில் பாதிக்கப்பட்ட பலரை நான் சந்தித்தேன். சிலரது விபரங்களையும், செவ்விகளையும் மட்டுமே, நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

தற்கொலைக்கும் அஞ்சாதவர்கள் விடுதலைப் புலிகள். ஆனால் அவர்களே போரில் நடந்த கொலைகளைப் பார்த்து நிலை குலைந்து போய் உள்ளனர். போரின் விளைவுகளை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு புனரமைப்புப் பணிகளைச் செய்ய இலங்கை அரசு முன்வந்தால்தான் அமைதியான சமூகத்தை அந்த நாட்டில் கட்டியெழுப்ப முடியும்.

வன்னியில் காயத்துக்கு மருந்திடத் தாமதித்தால் உயிரிழந்த ஒரு மதகுருவின் நிலை தனது குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு தாயாரின் மரணத்தின் இறுதி நிமிடங்கள் என்பவற்றையும் இந்த நிகழ்வில் பிரான்செஸ் ஹாரிசன் விவரித்திருந்தார். (ந-11)

# டீசல் விலை...

எம்மால் தொடர முடியாதுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் அதிகரிக்க இருக்கும் பேருந்துக் கட்டணங்களை தற் போதிருக்கும் பேருந்துக் கட்டணங்களை தற்போது இருக்கும் குறைபாடுகளையும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யாது, பேருந்து கட்டணங்களை அதிகரிக்க முடியாது என்று கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார். (ந-11)

# கண்தானம்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையின் அனுமதியுடன் தேசிய கண்தான தினம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையிலேயே ஜனாதிபதியின் பாரியார் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக தனது கண்களை நேற்றுத் தானம் செய்துள்ளார். (ந-11)

# பந்தயக் கார் இறக்கு...

பின்னர் 19 பந்தயக்கார்களை இறக்குமதி செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தினால் பொது மக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை. ஜனாதிபதி தமது புதல்வர்களுக்கு ஏற்பவே வரவு - செலவுத் திட்டத்தை தீட்டியுள்ளார். நாட்டில் பல இளைஞர் யுவதிகள் வேலை இல்லாமல் இருக்கின்றனர்.

அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகளினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். பெற்றோலுக்கான வரியை உயர்த்துவதே அரசாங்கத்தின் பிரதான வருமான வழியாக காணப்படுகின்றது.

அரச ஊழியர்களுக்கான ஏனைய கொடுப்பனவுகளை ரத்துச் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் அரச ஊழியர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஒரு லீற்றர் பெற்றோலை இறக்குமதி செய்ய 89 ரூபாய் செலவாகின்றது. எனினும் எரிபொருள் நிரப்பு நிலையங்களைச் சென்றடையும் போது ஒரு லீற்றர் பெற்றோல் 159 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கத்தின் வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான முக்கிய வழிகளில் ஒன்றாக எரிபொருள் விலையேற்றத்தை பயன்படுத்திக் கொள்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# ரி.ஐ.டியினரின் கைது...

வெளியாகியிருந்த போதும் நேற்று வரை 36 பேர் தொடர்பான முறைப்பாடுகளே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியகாரியாலயத்திற்குகிடைக்கப்பெற்றுள்ளதாக இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இதில் இரண்டு முறைப்பாடுகள் நேற்று கிடைத்துள்ளது. அதிலும் ஒருவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் மற்றையவர் கடந்த 14-ம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

நேற்றுக் கிடைத்த முறைப்பாட்டின் படி கைது செய்யப்பட்டவரில் ஒருவர் நெல்லியடியைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் (நேற்றுக் கைது செய்யப்பட்டவர்) சுன்னாகத்தைச் சேர்ந்தவர் 3 பிள்ளைகளின் தாயார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் அண்மைக்காலமாக கைது செய்யப்படுவர்களில் சிலர் புனர்வாழ்வு அளிக்கப்படாதவர்கள் எனவும் சிலர் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு ரி.ஐ.டியினரின் கைது நடவடிக்கையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகளினால் பொது மக்களின் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளதோடு இன்னும் எத்தனை பேர் கைது செய்யப்படவுள்ளனரோ என்ற ஏக்க நிலையும் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

23.12.2012 தொடக்கம்
நத்தார், புதுவருடம், தைப்பொங்கலை
முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
* பேபி மெத்தைகள்
* பிளாஸ்ரிக் கதிரைகள்
* அலுமினிய பொருட்கள்
* எவசில்வர் பொருட்கள்
* குழந்தைகளுக்கான தொட்டில்கள், வோர்கர், சைக்கிள்கள்
* பாடசாலைப் பைகள் மற்றும் வீட்டுக்குத்
தேவையான தரமான சகல
பொருட்களையும் பெற்றுக் கொள்ள...
மது பான்ஸி ஹவுஸ்
யாழ் வீதி, மானிப்பாய்.
C-1808



நத்தார் புதுவருட தினத்தை முன்னிட்டு
உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித தபால்கள், பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் CD, Video கள் கடல் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
கட்டணம் 650 ரூபாவில் இருந்து குறைக்கப்பட்டுள்ளது.
குறிப்பு: எமது பற்றுச் சீட்டுடன் வரும் வாடிக்கையாளர்களுக்கு 5% முதல் 20% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.
Happy New Year!
வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தை மிக விரைவாக பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
(எமது யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனம் தற்போது பழைய கடைக்கு முன்பாக ஆல்சிலோனிற்கு அருகாமையில் இயங்குகிறது) தொ.பே: 0212227835
2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு. 06 | இல. 208, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | இல.18, பிரதான வீதி, நெல்லியடி
(சி-1811)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.